இலங்கை கிறிஸ்தவ தேசிய மன்றத்தினி நீதிக்கும் சமாதானத்திற்குமான ஆணைக்குழுவின் காலாண்டிதழ்

ஆண்டு 1— இதழ் 1 செப்டம்பர் 1993 இலங்கையில் செய்திப்பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது.

# கடுமையான மீறல்கள் தொடர்கிறது என ஐக்கிய நாடுகளின் குழு கண்டுள்ளது.

## தமிழ் வாலிபர் விசேடமாக அபாயகரமான நிலையில் உள்ளனர்.

எம்பிலிபிட்டியாவில் 31 மாணவர் களின் மர்ம மறைவு றிச்சர்ட் த சொயிசாவின் வழக்கு போன்ற சம்மதமற்ற பலவந்தம் திடீர் மறைவு என்பவற்றை ஆராய 92ம் ஆண்டு ஐப்பசி இல் இலங்கை வந்த ஐ.நா. குழு தமது ஏமாற்றத்தை தெரிவித்துள்ளது. இவ் வழக்குகளை அதிகாரங்கள் எவ்வாறு மர்மமாயும் தண்டனையற்றதாயும் இருக்க இடமளிக்கிறது என தெளிவுபடுத்துகிறது.

ஐ.நா இன் மனித உரிமை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்த அறிக்கையில் "வடக்கு கிழக்கு தமிழ் வாலிபர்கள் தாங்கள் L.T.T.E.அல்லது அதன் உதவியாளர் என கைது செய்யப்படுகின்றனர். அல்லது மர்மமாக மறைகின்றனர். சிலர் இடம்மாற்றப் படுகின்றனர். விசேடமாக அகதி முகாம்களிலுள்ள ஏழை வாலிபர்களுக்கே இக்கூட்டு அதிகம். இவர்களில் அனேகர் ஏதாவது தொழில் புரிபவர்களாகவே உள்ளனர்" எனக் கூறப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி இவற்றிற்கு மூலகாரணம் இராணுவமே என இக்குழு வலியுறுத்துகிறது. ஏனெனில் ஆயுத போராட்டமற்ற நிலையில் மறைவுகளேற்பட்டாலும் பதிவுகள் இல்லை. அத்தோடு இவர்களோடு S.T.F. முஸ்லீம் காவலர் T.E.L.O, E.P.D.P போன் றவர்களும் உண்டென காட்டப்பட்டுள்ளது.

இவைகளுக்கு காரணம் துணிகரமே ஆகும். மனித உரிமை மீறல் யாரால் நடத்தப்பட்டாலும் நீதிமன்றத்தின் முன் கணக்கு கொடுக்கப்படுகிறதில்லை ஆதலால் தொடர்கிறது. அத்தோடு இவர்களேநீதியை தமது கரங்களிலும் வைத்துகொள்வதால் பயங்கர மீறல்களாக மாறுகிறது. அரசின் நடவடிக்கை மீறல்களை தடுக்க முடியாத நிலையிலேயே உள்ளது. எம்பிலிபிட்டிய மாணவர்களின் வழக்கு போன்றவைகளில் அரசே குற்றங்களை இனங்கண்டாலும் அவற்றை காட்டும் அளவுக்கு ஒத்துழைப்புடன் முன் வந்தாலும் குற்ற வாளிகளுக்கு விரோதமாய் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

வட-கிழக்கில் போராட்ட நிலையென அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டாலும் எல்லா மர்ம மறைவுகளுக்கும் காரணம் என்றும் குறிப்பாக தமது மாவட்டத்திலில்லாத முஸ்லிம் கிராமத்தில் 200 பேரை கொன்றது என்றும் குற்றம் சாட்டப் பட்டுள்ளது. ஆனாலும் இதன் காரணம் அரச பிரதிநிதிகளின் நடவடிக்கையாகும்.

நாட்டின் நிலைமை முன்னிருந்த கொடூரத்தை விட குறைவு என்றாலும் மனித உரிமை மீறல் கண்காணிக்கப்பட வேண்டும். கூட்டுறவு சுதந்திரம் பிரசுர சுதந்திரம் போன்றவை இவர்களின் ஆய்விற்கு வெளியிலமைந்துள்ளன என்பது குறிப்பிடப்பட வேண்டும்.

# தமிழர் துன்புறுத்தப்படவில்லை என ஐக்கிய அரசுகள் நீதிமன்றம் கூறுகிறது

தமிழரின் அரசியல் உரிமைகளை முன்னேற்றுகிறவர்கள் என்ற ரீதியிலோ இனரீதியிலோ இலங்கை அரசு மக்களை துன்புறுத்தவில்லை எனக் கூறி அரசியல் ரீதியில் புகலிடம் கோரிய இலங்கைத் தமிழ் விண்ணப்பதாரரின் கோரிக்கையை ஐ.இரா. குடிவரவு நிர்வாகசபை புறக்கணித்துள்ளது.

இவ்விண்ணப்பதாரி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 37 வயது இலங்கை பிரஜையாவார். இவர் தான் L.T.T.Eஇன் சில செயல்களை அவர்களின் பலவந்தத்தின் பேரில் செய்தபடியால் இலங்கை இராணுவம். I.P.K.F, L.T.T.E. இன் விரோதியும் அரசின் சினேகிதருமான E.P.R.L.F. இன்னும் பூரண ஒத்துழைப்பு கொடாதபடியால் L.T.T.E. ஆகியோ ரினால் துன்புறுத்தப்பட்டதாக குறிப் பிட்டுள்ளார். இவை உண்மையானது. நம்பத்தக்கது என நிர்வாகம் கருதினாலும் இலங்கை அரசியல் பின்னணி கவனமாக ஆராயப்பட்டு கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

இந்நிர்வாகம் அரசியல் பின்னணியை இவ்வாறு விவரிக்கிறது. L.T.T.E. சிறு பான்மை தமிழரை பிரதிநித்துவப்படுத்தும் ஒரு மிகச்சிறிய குழு. கூட்டரசுகளில் தமிழ்கட்சிகள் 1948 இலிருந்து முக்கிய இடம் வகித்து வருகிறது. 1950 - 1960 களில் இலங்கை அரசு சிங்கள தேசியவாதத்தினால் அச்சுறுத்துப்பட்டு, தீவிர சிங்கள குழுக்களை விசேடமாக J.V.P ஐ கூடக்கியது.

இலங்கையின் தீவிரவாதம் ஒரு ஸ்தாபனத்தினால் ஆரம்பிக்கப்பட்டு தமிழ் குழுக்களால் தொடரப்படுகிறது. தமிழரின் நன்மை கருதியே தமிழருக்கு சரிசனை காட்டிய அரசு I.P.K.F, ஐ ஏற்றுக் கொள்ளப்பட்டது. விண்ணப்பதாரி I.P.K.F, இலங்கை வந்தபின் தமிழ் விரோதியாக மாறினார் என்பதனை குறிப்பிட மறந்துவிட்டார்.

அத்தோடு மனித உரிமை அவமாக்கப்பட்டுள்ளது என மறுக்க முடியாது. ஆனால் இவ்வவமாக்குதலே துன்புறுத்தல் என அர்த்தம் கொள்ளாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனிய வாசகர்களுக்கு

எம் முதல் வணக்கம்

தேசிய கிறிஸ்துவ மன்றத்தின் காலாண்டு சஞ்சிகையான "குறோஸ் பொயின்டின்" (CROSS POINT) தமிழ் உடன் பிறப்பே செங்கோல்!

செங்கோல் நீதி சமாதானம் குறித்தும் மனித உரிமைகள் குறித்தும் தகவல்களையும் ஆக்கங்களையும் உங்கள் முன் சமர்ப்பிக்கும்.

இத்தகவல்கள் வெறுந் தகவல் களாக மட்டும் அமைந்து விடாது சமூக மாற்றத்திற்கான தகவல்களாக அமையும் என்பதே எமது எதிர்பார்ப்பு. குறிப்பாகத் தமிழ்மக்களின் செங்கோலாட்சி க்கான தாகத்தை செங்கோல் பிரதிபலிக்கும் எமது நோக்கப் பரிமாணத்திற்குள் அடங்கும் ஆக்கங்களை அன்பர்கள் எமக்கு அனுப்பி வையுங்கள். தகுதியானவற்றிற்கு களம் அமைத்து கொடுப்போம். செங்கோலின் வளர்ச்சி உங்கள் கரங்களில்.

தட்டிக்கொடுங்கள்! தட்டிக் கேளுங்கள்!

மீண்டும் சந்திப்போம்.

# நொச்சிமோட்டையும் இன்னுமோர் கிளாலியாகுமா?
## (ஓர் நேர்முக வர்ணனை)

அன்று 31.05.1993 காலை தமிழீழ விடுதலைப் புலிகளின் கூட்டுப்பாட்டுக்குள் இருந்த பிரதேசத்திலிருந்து ஸ்ரீலங்கா அரசின் கூட்டுப்பாட்டுக்குள் இருக்கும் நொச்சிமோட்டை பகுதியை அடையும் நோக்குடன், நொச்சிமோட்டை ஸ்ரீலங்கா இராணுவ காவல் அரணுக்கு முன் காத்திருந்தோர், ஏறத்தாழ 500 பேர் காலை 8.15 மணியளவிலிருந்து காத்திருந்தோம். காவலரணில் நின்ற தமிழ் ஈழ மக்கள் விடுதலை இயக்கத்தைச் (P..L.O.T) சேர்ந்த சிலர் எம்முடன் இருந்த இருவரை அழைத்து தமிழீழ விடுதலைப்புலிகள் தங்களது காவலரணுக்கு அண்மையில் நிற்கின்றனரா? எங்கே நிற்கின்றனர்? எத்தனைபேர்? என்று எல்லாம் விசாரித்தனர். பின்பு சிறிது நேரத்தின் பின் மக்களை தங்கள் காவலரண் பகுதியினுள் அனுமதித்தனர்.

எப்போது வவுனியா செல்லலாம்? புகையிரதத்தை தவறவிட்டு விடக்கூடாது.... என்றெல்லாம் எண்ணிக்கொண்டிருந்த நாங்களும் இராணுவத்தின் காவல் அரண் நோக்கிச் செல்ல முற்பட்டபோது துப்பாக்கி சத்தங்கள் கேட்டன. எல்லாரும் படுங்கள் என மக்கள் கூக்குரலிட்டபடி நடுவீதியில் படுத்தனர். சிலர் இராணுவ காவலரண் பகுதியில் படுத்துக்கொண்டனர். காலை 8.40 அளவில் தொடங்கிய இச்சிறுபோர் 2 1/2மணிநேரம் நீடித்தது.

தமிழீழ விடுதலைப்புலிகள் எம்மோடு வந்து தமிழ் மக்கள் விடுதலை இயக்கம் உறுப்பினருடனும் இராணுவத்துடனும் போரிட்டனர் என பின்பு அறிந்து கொண்டேன். மூன்று தமிழீழ மக்கள் விடுதலை இயக்க உறுப்பினர்களும் ஒரு இராணுவ வீரனும் 5 தமிழீழ விடுதலைப் புலிகளும் 13 சாதாரண மக்களும் இறந்துவிட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் கூறினர்.

இச்சிறு போர் முடிய எங்களில் பலரைக் கொண்டு இறந்தவர்களது உடல்களும் காயமடைந்தோரும் வாகனங்களில் ஏற்றப்பட்டு வவுனியாக்கு அனுப்பப்பட்டனர். எங்களை இராணுவம் வரிசையில் நிற்கும்படி கூறி இளைஞர்களை மட்டும் தெரிந்தெடுத்து தனி வரிசைப்படுத்தினர். நடுவீதியிலேயே எம்மைப் பரிசோதித்தனர். என்னுடன் நின்ற பல இளைஞர்கள் வியாபாரிகள். வழமையாக தமது பணத்தைப் பத்திரப்படுத்த அரைக்காற்சட்டை அணிந்து அதன்மேல் சாரம் கட்டியிருந்தனர். அரைக்காச்சட்டை அணிந்தபடியால் தமிழீழ விடுதலைப்புலி என்று கூறி 5 பேர் கைது செய்யப்பட்டனர். எனக்கு அருகிலிருந்த ஒரு வியாபாரி சொன்னார் "தம்பி இவர்களை எனக்கு நன்றாகத் தெரியும், ஆனால் நான் ஏதாவது சொன்னால் என்னையும் கைது செய்து விடுவார்கள்.

இராணுவத்தினரும் P..L.O.T உறுப்பினரும் எங்களுடைய பொருட்களையும் பைகளையும் ஒரிடத்தில் வைக்கும்படி கூறினர். அத்திசையைப் பார்க்கவேண்டாம் என கட்டளை யிட்டனர். சிறிது நேரத்தின் பின் எமது பொருட்களும் பைகளும் இருந்த இடத்தில் குண்டு இருப்பதாகக் கூறி எம்மை சற்றுத்தூர அனுப்பிவிட்டு வெடிக்கச் செய்தனர்.

இராணுவத்தினரின் பரிசோதனை அரச உளவுப் படையின் பரிசோதனை எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு வவுனியா நகரை அடைந்தபோது இரவு புகையிரதத்திற்கு காத்திருக்கும் நிலை ஏற்பட்டது.

கிளாலியில் அடிக்கடி பலர் இறக்கின்றனர். காணமற் போகி றார்கள். அதே நிலை நொச்சி மோட்டையிலும் தொடங்கி விட்டது போலிருக் கிறது. மக்கள் வட பகுதிக்குச் செல்ல இருக்கும் ஒரே வழியான இதுவும் ஒரு போர்க்களமாகிவிட்டால் மக்களுக்கு தடை செய்யப்பட்ட பிரதேசம், தடை செய்யாத பிரதேசமும் வேறுபாடின்றியே போய்விடும்.

செங்கோல்

இலங்கையின் கிறிஸ்தவ தேசியமன்றத்தின் நீதிக்கும் சமாதானத்திற்குமான ஆணைக்குழு.

368/6, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு – 7.
தொலைபேசி : 697879, 693760
∴பெக்ஸ் : 697879

ஆசிரியர் : டிரோல் பேர்டினாண்ட்ஸ்
இணை ஆசிரியர் : அந்தனி ஜீவா
ஆலோசகர்கள்
வண. எபனேசர் ஜோசப்
வண. ஜோசுவா இரத்தினம்
வடிவமைப்பு
லங்கா பப்ளிஷிங் ஹவுஸ்
அச்சுப்பதிவு
சர்வோதய விஸ்வலேகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்ப்பார்ப்புகளும் ஏமாற்றங்களும் வடபகுதி மக்களும்

*வண. எ. வில்பிறட் ஜெபநேசன்*

யாழ்ப்பாண அரசியல் சூழலில் எதிர்ப்பார்ப்புகளும் ஏமாற்றங்களும் ஒன்றோடொன்று கலந்து கிடப்பதை அவதானிக்க முடிகிறது. 1990 அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமான யுத்தம் ஆரம்பமாகி மூன்றாண்டுகள் முடிவடைந்து விட்ட நேரத்தில் வடபகுதியை பொறுத்தவரை அரசாங்கம் தனது கூட்டுப்பாட்டையும் நிர்வாகத்தையும் இழந்து வருகிறது என்றே கூறவேண்டும்.

விடுதலைப் புலிகளுக்கெதிராக மனித உரிமை மீறல் சமபந்தமான குற்றச்சாட்டுகளும், அனுசரித்து போகாத போக்கும், குறைபாடுகளாக கூட்டப்பட்டு வந்திருக்கின்றன. சர்வதேச அரங்கிலும், ஏன் உள்நாட்டு அரங்கிலும் மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களின் அமைப்பு போன்றவற்றால் இக்குற்றச்சாட்டுகள் பெரிதுபடுத்தி காட்டப்பட்டிருக்கின்றன. அவை உண்மையா? பொய்யா? என்பதை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமல்ல. ஆனால் இவற்றின் மத்தியிலும் இப்போராட்டம் தொடர மக்களின் ஆதரவு இருக்கிறது என்றால் அது ஏன் என்பதை நாம் புரிந்து கொள்ள முயல்வது நல்லது.

இந்த யுத்தம் ஆரம்பமான காலத்திலிருந்து பல அமைப்புகளும், குழுக்களும் சமாதான முயற்சிகளை மேற்கொண்டு வந்திருக்கின்றன.இவற்றில் பெரும்பாலானவை சமயச் சார்புள்ள குழுக்களாகவே இருந்திருக்கின்றன. அதிலும் கிறீஸ்தவ குழுக்களே முன்னிடத்தை வகித்திருக்கின்றன. கிறீஸ்தவர்கள் இதில் ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணமோ? அல்லது எதுவுமே செய்யாமல் இருக்கிறோமே என்ற மன உறுத்தல்களோ இதற்கு காரணமாக அமைந்திருக்கலாம்.

இக்குழுக்களின் வருகை யாழ்ப்பாண மக்களின் வாழ்வில் புதிய எதிர்பார்ப்பை உருவாக்கியது உண்மைதான். யுத்தத்தின் கோரத்தினால் பலவகையிலும் பாதிக்கப்பட்டிருந்த வடபகுதி மக்கள் நல்லெண்ண குழுக்களின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்ததில் வியப்பில்லை. எப்போது யுத்த நிறுத்தம் வரும்? அமைதி வரும்? என்ற வினாக்களெல்லாம் நல்லெண்ண குழுக்களின் அங்கத்த வர்களிடம் கேட்கப்பட்டன. கொழும்பிலிருந்து வந்த நல்லெண்ண குழுக்கள் மக்களுடன் தம்மை ஒன்றிணைக்க, புரிந்து கொள்ள வந்த குழுக்கள் என்பதிலும் பார்க்க, சமாதானம் தரவந்த குழுக்கள் என்ற கண்ணோட்டத்திலேயே பார்க்கப் பட்டன. முதலாம் முறை இரண்டாம் முறை என இக்குழுக்கள் வரத்தொடங்கிய போது பெரும் எதிர்பார்ப்புகளை கொண்டிருந்த யாழ்ப்பாண மக்கள் காலப்போக்கில் இதில் பிரயோசனம் இல்லை என்பதை புரிந்து கொண்டனர். நல்லெண்ண குழுக்களை ஆரம்பத்தில் சந்திக்க ஆயத்தமாயிருந்த விடுதலைப் புலிகளின் தலைவர்களும் அதில் பிரயோசனம் இல்லை என்பதை உணர்ந்தனர். அரசாங்கத்தின் ஆதரவுடன் வரும் நல்லெண்ண குழுக்களையும், அவர்களின் தீர்வுத்திட்டங்களையுமே தாம் பரிசீலிக்க தயாராக இருப்பதாக விடுதலைப்புலிகள் கூறினர்.

வடபகுதி மக்களின் நிலை இப்படி இருக்க இந்த நல்லெண்ண குழுக்களை தென்பகுதியிலே மக்கள் எப்படி பார்த்தனர் என்பதையும் புரிவது நல்லது. ஒவ்வொரு முறையும் யாழ்ப்பாணம் வந்துவிட்டு நல்லெண்ண குழுக்கள் திரும்பும் போது அவர்களின் வருகையை புரிந்து கொள்ள, வடபகுதிமக்கள் பத்திரிகை செய்திகளை எதிர்பார்த்து காத்திருப்பது வழக்கம். ஆனால் தென்பகுதி பத்திரிகைகள் நல்லெண்ண குழுக்கள் விடுதலைப்புலித் தலைவர்களை சந்தித்ததையும், யாழ்ப்பாணம் சென்று வந்ததையும் பெரிது படுத்தி கூறினவே தவிர, இதிலிருந்து நன்மைகள் எதுவும் உருவாகும் என்பதை காட்டவில்லை. இன்னொருவகையில் இக்குழுக்களின் வருகை தேவையற்ற, பலனற்ற ஒன்று என்ற எண்ணத்தையே தோற்றுவித்தன. இவற்றுக்கு சிகரம் போல் இலங்கைத் திருச்சபை பேராயரின் வருகை அமைந்தது.

பேராயரின் வருகையை பத்திரிகைகள் கையாண்ட விதம், வடபகுதி மக்களின் மனதில் வடுக்களாக பதிந்து விட்டன. நல்லெண்ண வருகையிலே பயனில்லை, என்று எண்ணும் நிலை உருவாகியுள்ளது. யாழ்ப்பாணத்திலே நடக்கும் விடயங்களை பார்க்க வரும் கூட்டமாக நல்லெண்ண குழுக்கள் பார்க்கப் பட்டனவே தவிர யாழ்ப்பாண மக்களுக்கு இவற்றால் பலன் எதுவும் கிடைக்கும் என்ற எண்ணம் அற்றுவிட்டது. இந்நிலையில் தொடர்ந்த யுத்தம் மக்களின் மனதில் விரக்தி நிலையையே தோற்றுவித்தது. எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ள வேண்டும். தென்பகுதியிலிருந்து எவ்வித தீர்வும், நன்மையும் வரப்போவதில்லை என்ற எண்ணம் வளர ஆரம்பித்தது. பொருளாதாரத் தடை இவ்வெண்ணத்தை வளர்க்க பெரிதும் காரணமாயமைந்தது. சாதாரண பாவனைக்கு தேவையான பொருட்கள், இராணுவ காரணங்களுக்காக தடைசெய்யப்பட்டதை எவ்வித்தில் புரிந்து கொள்வது என்று தெரியாத நிலையில் மக்கள் திணறினார்கள். மருந்து வகைகள், உரவகைகள், கிருமிநாசினிகள், அச்சிடும் தாள்கள் போன்றவற்றின் மீதான தடைகள் வடபகுதியை பெரிதும் பாதித்தன. தனியார் மருந்து கடைகளில் மருந்துகளின் விலைகள்பலமடங்கு அதிகரித்தன. விவசாயிகள் இரசாயன உரங்களை விட்டு பாரம்பரிய முறைகளுக்கு செல்லவேண்டிய சூழல் உருவானது. உணவு உற்பத்தி குறைவும்,உணவுப் பொருட்களை கொண்டுவருவதிலுள்ள சிரமங்களும் உணவுப் பொருட்களின் விலையை அதிகரித்தன மட்டுமல்ல இரும்புப் பொருட்கள், சீமேந்து, மரப் பலகைகள் மீதான தடைகள் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்ட கட்டுப் பாடுகள் ஆயிரக்கணக்கான வேலையற்ற வர்களை உருவாக்கியது. இவற்றோடு இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்களும் சேர்ந்து கொள்ள பிள்ளைகளிடையே போஷாக்கின்மை தோன்ற ஆரம்பித்தது.

இச்சூழல் பொருளாதார நோக்கங்களுக்காக வெளிநாடு செல்லும் மக்கள் தொகையை அதிகரித்தது. வெளிநாடு சென்றவர்கள் அனுப்பும் பணத்தில், பொருட்களுக்கு அதிக விலையை கொடுத்து வாழப்பழகிக் கொண்ட ஒரு கூட்டம். யாழ்ப்பாணச் சூழலையே விட்டு தெற்கு நோக்கிப்புறப்பட்ட இன்னுமொரு கூட்டம். இதைத்தவிர யாழ்ப்பாண சூழலிலேயே வாழப் பழகிக் கொண்ட இன்னொரு கூட்டம் என மூன்றாக பிரிந்த வடபகுதி மக்கள், நிரந்தர வேலை செய்பவர் தவிர்ந்த ஏனையவர்கள் வறுமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டுக்கும் கீழ்ப்பட்ட நிலைக்கு தள்ளப்பட்டனர். மாதக்கணக்கில் ஒரு வேளை உணவுடன் வாழும் குடும்பங்கள் பல உருவாகியிருக் கின்றன. வட பகுதியின் உட்புறம் எதிலும் இராணுவ கூட்டுப்பாடுகள் இல்லை. விடுதலைப் புலிகளின் முகாம்களை தாக்க விமானங்களே பயன்படுத்தப்படுகின்றன. புலிகளின் விமான எதிர்ப்பு துப்பாக்கி களுக்கு பயந்து அதிக உயரத்திலிருந்து போடப்படும் விமானக் குண்டுகளை சந்திப்பது பொது மக்களும், அவர்களின் உடமைகளும்தான். விமானப்படை விமானங்கள், திட்டமிட்டு பொது மக்களை அழிப்பதாக அவர்கள் எண்ணிக் கொள்வதில் தவறில்லை.

மக்கள் பிரயாணம் செய்கின்ற பாதைகள் அனைத்தும் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டு, யாழ். குடா நாட்டிலிருந்து வெளியேற முடியாத நிலை கவலைக்குரியது. மாற்றுவழிகள் எதுவும் மக்களுக்கு கொடுக்கப்படாததால் விடுதலைப்புலிகள் தரும் பாதுகாப்பை நம்பி கிளாலி கடலேரியூடாக பயணம் செய்யும் நிலை தோற்றுவிக்கப் பட்டுள்ளது.

வடக்கில் நிலவும் இச்சூழல் வடபகுதி மக்களுக்கு பழகிப்போன சூழலாக மாறிவருகிறது. யுத்த சூழலுக்கு பழகிப்போன மக்களின் வாழ்க்கை முறைகள், பழக்கவழக்கங்கள், தொழில்கள் அனைத்தும் புதிய வடிவமெடுக்கின்றன. மரணங்களுக்கு அழுபவர்கள் இல்லை. அழிவுகளைக் கண்டு அதிர்ச்சி அடைபவர்கள் இல்லை. யுத்தம் ஆரம்பமான காலத்தில் பிரச்சனையாக இருந்த விடயங்கள் பல இப்போ பழகிப்போன விடயங்கள்.

எமக்கு எத்தீர்வுகளும் இல்லை. அரசாங்கத்திற்கு தீர்வுகளைத் தர ஆர்வமில்லை என்ற எண்ணம் பிரிவினையை, நாடு பிளவுபடுவதை தடுக்கமுடியா நிலையொன்று உருவாவதைக் காட்டுகிறது. பிரிவினை வேண்டாம் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வைக் காண்பதுதான் நல்லது என்ற எண்ணமும் வடபகுதியிலிருந்து இல்லாமற் போகவில்லை. ஆனால் மாற்றுவழி என்ன? யார் கூறுவார்கள்? இன்னும் சற்று பொறுத்திருந்து பார்ப்போம்.

* * *

# சிந்தனைத் துளிகள்

—எம்.எம்.தோமஸ்—

*அறிவர் எம்.எம். தோமஸ் அவர்கள் இந்தியாவில் கேரள மாநிலத்தை சேர்ந்த மார்த்தோமா வைதீக திருச்சபையின் உறுப்பினராவார். இவர் உலக திருச்சபை மன்றத்தின் முன்னாள் தலைவராவார். மூன்று பல்கலைகழகங்களினாலும் கௌரவ கலாநிதி பட்டம் வழங்கப் பட்டவர்.அண்மையில் இந்தியாவின் நாகலாந்து மாநிலத்தின் ஆளுனராக செயலாற்றினார்.*

*அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த இவர் பங்குபற்றிய சுருத்தரங்குகளில் பகிர்ந்து கொண்ட சுருத்துக்களின் தொகுப்பாக்கம் கீழே தரப்பட்டுள்ளது.*

## கிறித்தவமும் மார்க்சியமும்

எனது இளமை பருவத்தில் ஒரு ஆச்சிரமத்தோடு தொடர்பு கொண்டு நடைபாதையில் வாழும் சிறுவர் மத்தியில் பணியாற்றினேன். இந்த சூலகூட்டத்திலே வறுமை ஏன் தாண்டவமாடுகிறது என்ற கேள்வி என்னை உறுத்திக் கொண்டேயிருந்தது. இது மார்க்சிய வாதத்தை குறித்த எனது ஆர்வத்தையும் அரசியல் ஈடுபாட்டையும் தூண்டியது. நீதிக்கான எனது அரசியல் ஈடுபாடு இறையியலை குறித்து என்னை சிந்திக்க தூண்டியது.

சமூகத்தில் செயல்படும் காரணிகளை புரிந்து கொள்ளவும் இனங்கண்டு கொள்ளவும், மார்க்சியம் உதவுகின்றது. ஏன் மனிதன் சுயநலத்துடனும், ஆசை இச்சை என்பவற்றின் விளைவாக உருவெடுக்கும் பாவத்திற்கும் அடிமைப் படுகிறான் போன்ற வினாக் களுக்கு இறையியலே விடையளிக்கிறது. எனது வாழ்விலே எனது அரசியல் ஈடுபாடு நீதியை குறித்த வேட்கையும் என்னை இறையியலுக்கு வழிநடத்தியது. பல்லாண்டு காலமான அனுபவத்திற்கு பின் எல்லா சுருத்தியற் கோட்பாடுக ளையும் பகுத்தாய்ந்து அணுகும் முறையை இறையியலே உருவாக்குகிறது என உறுதியாக கூறலாம்.

## அங்கத்துவமும் நிராகரிக்கப்படலும்

நான் கேரளாவிலிருக்கும் மார்த்தோமா வைதீக திருச்சபையை சேர்ந்தவன். குருத்துவ பணியாற்ற விரும்பி அத்திருச்சபைக்கு விண்ணப்பித்தேன். நான் மார்க்சிய கட்சியுடன் அதிக ஈடுபாடு கொண்டவன் என்ற காரணத்தால் நிராகரிக்கப்பட்டேன். பின்னர் மார்க்சிய கட்சியின் அங்கத்துவ னாக விண்ணப்பித்தேன். நான் திருச்சபை யுடன் அதிக ஈடுபாடு கொண்டவன் என்ற காரணத்தால் அவர்களும் என்னை நிராகரித்தனர்.

## இயேசுவின் தனித்துவம்

இயேசு தனித்துவம் உள்ளவராகவே இருக்கிறார். இந்த தனித்துவத்தை நாம் அனுபவத்திலே உணர வேண்டும். அது எமது சுய முயற்சியினால் வலிந்து நிலைநாட்டப்பட வேண்டிய அவசியமில்லை. அதனை நாம் தான் பாதுகாக்க வேண்டும். பறைசாற்ற வேண்டும் என்ற அவசியமில்லை. எம்முடைய சுய முயற்சியில் அது தங்கியிருக்குமானால் அது தனித்துவ மல்ல. அரசியல் சிக்கல்களிலும், நீதிக்கான போராட்டங்களிலும் அவரை தனித்துவம் உள்ளவராக அனுபவத்திருக்கிறோம். எனவே தனித்துவம் அனுபவத்திலே உணரப்பட வேண்டியதொன்றாகும்.

## கிறித்தவ திருச்சபை

கிறித்தவ திருச்சபைகளுக்குள் இன்று உணர்விற்கும் உணர்ச்சிக்கும் இடம் கொடுக்கப்படுவதில்லை. விசுவாசத்தை குறித்த வெறும் அறிவுசார்ந்த வெளிப் பாடுகள் மட்டும், திருச்சபையின் வளர்ச்சிக்கு ஆதாரமாக அமையமுடியாது. எமது விசுவாசத்தின் வெளிப்பாடுகள் அறிவு சார்ந்த விளக்கங்களில் ஆழமாக வேரூன்றுகின்ற அதே வேளையில் உணர்ச்சி சார்ந்த வெளிப்பாடுகளிலும் வலுப்பெற வேண்டும்.

ஆயர் பணியிலும் இவ்விரண்டிற்கு மான சமநிலை பேணப்பட வேண்டும். இன்றைய உலகிலே வெவ்வேறு காரணங்களினால் பாதிக்கப்படுகின்ற தனிமனிதர்களுக்கு திருச்சபை ஆற்றக்கூடிய பெரும் சேவை இத்தகைய ஆயர்பணி மேற்கொள்வதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமயங்களைப் பற்றி

இறைவனை சார்ந்த நம்பிக்கை அல்லது விசுவாசம் ஒரு அனுபவத்தை சார்ந்தே உருவாகி உறுதி பெறுகின்றது. இத்தகைய நம்பிக்கை நிலை பெறுவதற்கு ஒரு சமயம் என்ற கட்டமைப்பு அவசியமாகின்றது. எனவே சமயம் என்ற வரையறும்பு இல்லாமல் நம்பிக்கை தன்னந்தனியாக நிலைக்க முடியாது. எனினும் ஒவ்வொரு சமயத்திலும் மையம் நம்பிக்கையே. எனவே சமய அமைப்பானது அடிக்கடி பரிசீலனை செய்யப்பட்டு சீர்திருத்தப்பட வேண்டும். நம்பிக்கையின் அடிப்படையில் சமயமானது தீர்க்கமான சீர்திருத்தம் அடைவது அவசியமாகின்றது.

## பிற சமயங்களுடன் உறவு

கிறித்தவ நம்பிக்கையின் படி மனுக்குலத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் பெறுமதி வாய்ந்தவர்கள்.எந்த இனம், சாதி, நிறம், சமயத்தை சேர்ந்தவராயினும் அனைவரும் பெறுமதி வாய்ந்தவர்களே. எமக்கிருக்கும் நற்செய்தி கூட மனுக்குலத்திற்கு அருளப்பட்ட ஈவாகும். எனவே இரட்சிப்பை கூட நாம் மனுக்குலம் தனது மானிடத்தன்மையை இப்பொழுதே அடைகின்ற நிகழ்வாக பரந்த கண்ணோட்டத்துடன் கருத வேண்டும். எனவே மானிடத்தின் பொது நலனுக்காக நாம் எல்லா சமயத்தவருடனும் கூட்டாக ஒத்துழைக்க வேண்டும்.

## இனக்கலவரங்கள்

நாகலாந்து மாநிலத்தில் நான் பெற்ற அனுபவத்திலிருந்தே இவற்றை கூறுகின்றேன். நாக மக்கள் தமது சுய கௌரவத்தை பேணுவதுடன், தமது சுய நிர்ணய உரிமையையும் பாதுகாக்க செயல்பட்டுவருகின்றனர். இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின் படி அவர்கள் சுய தேசிய உரிமை பெற்றவர்களாக இருந்தாலும், அதனை யதார்த்த நிலையில் உண்மை வடிவம் கொடுக்கவே போராடுகின்றனர்.

எந்த ஒரு இனத்திற்கும் தனது சுய கௌரவத்தை பேணுவது அத்தியாவசிய மாகும். தம்மை பாதிக்கும் காரணிகளை குறித்து தாங்களே நிர்ணயிக்கின்ற உரிமை பெறுவது அவசியம்.

நாக மக்களை பொறுத்தவரையில் இந்தியா தனது சுயாட்சி முறையை மேலும் வலுப்படுத்தி கூடிய அதிகாரங்களை இம்மக்களுக்கு வழங்க வேண்டும். எந்த ஒரு இனத்தையும் வலுக்கட்டாயப்படுத்தி அடக்கி வைக்க முடியாது. அப்படி அடக்கி வைத்தாலும் ஒரு நாள் வெடித்தே தீரும்.

## வன்முறை

அடக்கு முறை எப்போதுமே வன்முறைக்கு வழிவகுக்கிறது.இவ்வாறு உருவெடுக்கும் வன்முறையை, சூழ் நிலை சார்ந்தே கருத வேண்டும். எந்த ஒரு யதார்த்த நிலையிலும் வன்முறை அடக்குமுறை வன்முறை போராட்டத் திற்கு வித்திடுகின்றது. இத்தகைய போராட்டங்களை செயல்படுத்தும் வன்முறைக்கும் ஒரு வரையறும்பு அவசியம். ஒரு அறநெறி கூட்டுப்பாடு அவசியம். வாழ்வின் அனைத்து கூறுகளையும் நிர்ணயிக்குமானால் அது நிராகரிக்கப்பட வேண்டும். தகுந்த கூட்டுப்பாடுகள் இல்லாத வன்முறை நிச்சயமாக தனது இலட்சிய பாதையிலிருந்து தவறிவிடும்.

---

நாட்டு நிலை ஆபத்தானது

## "இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்ப வேண்டாம்."

சுவிஸ் அரசிடம் உலக திருச்சபைகள் சங்கமும் ஐரோப்பிய திருச்சபைகள் மாநாடும் கூட்டாக வேண்டுகோள்.

சுவிஸ் அரசும் இலங்கை அரசும் இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவது தொடர்பாக ஒரு உடன்பாடு காண இருப்பதாகவும் அது தொடர்பான ஒரு உடன் பாட்டினை இறுதியாக்குவதற்காக சுவிஸ் அரசின் அகதிகளுக்கான பணிப்பாளர் கலாநிதி ஹான்ஸ் ஷீடெக்கர் கொழும்பு வந்ததையும் பத்திரிகைகள் செய்தியாக வெளியிட்டன. அத்துடன் அகதிகளை திருப்பியனுப்பும் சுவிஸ் அரசின் முயற்சி மற்றைய ஐரோப்பிய நாடுகளுக்கும் ஒரு முன்மாதிரியாக அமையும் என்றும் அவர் கருத்து வெளியிட்டதாகவும் செய்திகள் வெளிவந்தன. இது தொடர்பாக 1993 ஆகஸ்ட் 10 ஆம் திகதி உலக திருச்சபைகள் சங்கமும், ஐரோப்பிய திருச்சபைகள் மாநாடும் கூட்டாக சுவிஸ் அரசுக்கு விடுத்த வேண்டுகோளின் சில பகுதிகள் கீழே தப்படுகிறது.

" உலகத் திருச்சபைகளின் சங்கத்திலும், ஐரோப்பிய திருச்சபைகளின் மாநாட்டிலும் உறுப்பினராக உள்ள திருச்சபைகளுக்கு மிக அக்கறையுள்ள விடயமாக இருப்பது அகதிகள் பிரச்சினை என்பது உங்களுக்குத் தெரியும். உலகம் முழுவதிலும் உள்ள அகதிகளைப் பாதுகாப்பதிலும் அவர்களுக்கு உதவுவதிலும் இந்த இரண்டு அமைப்புகளின் ஈடுபாடுகளும் வரலாற்று பதிவுகளாகும்.

இலங்கையில் நிலவும் சூழ்நிலையை நன்கறிந்த நிலையில் அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்கு அங்கு நிலவும் சூழ்நிலை ஏற்றதாக இல்லை என்பது உலகத் திருச்சபைகளின் சங்கத்தினதும் ஐரோப்பிய திருச்சபைகளின் மாநாட்டினதும் ஆரத்தீர ஆய்ந்த கருத்தாகும். ஒரு தசாப்தமாக நிலவும் இனப்பிரச்சினை நாட்டை நிலை தளம்பச் செய்துவிட்டது. ஆதலால் மக்கள் உயிருக்கும் பாதுகாப்புக்கும், குறிப்பாகத் தமிழ் மக்களது உயிருக்கும் பாதுகாப்புக்கும் உத்தரவாதம் அளிப்பதில் அரசு வலுவிழக்கச் செய்யப்பட்டு விட்டது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையமும், மற்றும் அனைத்துலக மதிப்புப் பெற்ற சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச நீதியாளர் ஆணையம் ஐரோப்பிய பாராளுமன்றம் உட்பட்ட மற்றும் அமைப்புகளும் பொலீஸ், இராணுவம், தமிழ்த்தீவிர வாதிகளால் செய்யப்படும் அக்கிரமங்களுக்கு உலகின் கவனத்தை ஈர்த்துள்ளன: ஆனால் அதனால் பயன் ஏதும் ஏற்பட வில்லை.அண்மையில் கொழும்பில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியும், ஜனாதிபதி பிரேமதாசாவும் கொல்லப்பட்டமை எல்லா மக்களதும் பாதுகாப்பின்மை உணர்வை மேலும் வலுவடையச் செய்துள்ளன.

இலங்கையில் உள்ள உலகத்திருச் சபைகள் சங்க உறுப்பினர்களான திருச்சபைகளும் திருச்சபைகளின் தேசிய சங்கமும், சுவிற்சலாந்து உட்பட ஐரோப்பிய நாடுகளில் பாதுகாப்பில் உள்ள தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் எந்த நடவடிக்கையைப் பற்றியும் அதிருப்தியைத் தெரிவித் துள்ளன. தேவைப்பட்டால் இந்த அறிக்கையை நாம் உங்கள் பார்வைக்கு அனுப்பிவைக்க முடியும். அகதிகள் திருப்பி அனுப்பப்படுவதற்கு ஏற்ற சூழ்நிலை இல்லை என்பது திருச் சபைகளின் கருத்து"

*பிகு: சுவிற்சலாந்து தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் முயற்சியை தற்சமயம் கைவிட்டது. - (ஆ-ர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருபுறம் கைது மறுபுறம் கொள்ளை

# தமிழ் மக்கள் தலைநகரில் படும்பாடு

முக்கியமாக 19. 7. 83 "வீரகேசரி" பத்திரிக்கையின் தலைப்புச் செய்தியிலும் தொலைக்காட்சிச் செய்தியிலும் இரண்டு முக்கியமான செய்திகள் வெளிவந்தன. இந்த வருடத்திலே மிகவும் பாரிய விமானதாக்குதல்களை மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் தாம் மேற்கொண்டிருப்பதாக பாதுகாப்புப் பிரிவினர் அறிவித்தார்கள். அதனை சகல பத்திரிகைகளும் ரூபவாஹினியும் கூட வெட்டவெளிச்சமாக வெளியிட்டிருந்தன. நான் இங்கு குறிப்பிட விரும்பும் விடயம் என்னவெனில், இந்த நாட்டில் பாரிய விமான தாக்குதல்கள் நடத்தப்பட்டு, அதில் பல நூறு பேர் இறந்திருப்பதாகச் சொல்லிக்கொள்வதில் பாதுகாப்பு படையினர் உட்பட இந்த நாட்டின் பத்திரிகைகளும் ரூபவாஹினியும் மிகவும் சந்தோசமடைகின்றன என்பதை தான். பலநூறு புலிகள் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் கூறப்பட்டது என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்பி கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது

முல்லைத்தீவுக் காட்டுக்குள் என்ன நடந்ததோ நான் அறியேன், ஆனால் கிளிநொச்சியை பொறுத்தவரை யில் கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் நடந்த விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட வர்கள் நான்கு பேர். அந்த நான்கு பேரும் அப்பாவிகள். அவர்களில் யாருமே புலிகளுடன் சம்பந்தமில்லா தவர்கள். பதினைந்துக்கு மேற்பட்ட கடைகள், வீடுகள் அதில் அழித்தொழிக்கப்பட்டன. ஆகவே இப்படியான தாக்குதல்கள் நிச்சயமாக புலிகளைக் கூட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவோ, பிரச்சினைகளைத் தீர்க்கவோ உதவிச்செய்யும் என நான் கருதவில்லை. அது மாத்திரமல்ல: 10,000 இராணுவத்தினரை மேலும் சேர்க்க இருப்பதாகவும், வருகின்ற 22ந் திகதி தொடக்கம் நாட்டின் 12 இராணுவ முகாம்களிலும் அதற்கான நேர்முக பரீட்சைகள் நடைபெறவிருப்பதாகவும் அந்த 10,000 இராணுவத்தினரும் சேர்க்கப்பட்டால் தற்போது 90,000 ஆக இருக்கும் இராணுவத்தினரின் தொகை ஒரு லட்சமாக அதிகரிக்கப்படுமெனவும் நேற்றைய பத்திரிக்கையின் தலைப்புச் செய்தி கூறியது. ஒரு லட்சமாக அதிகரிக்கப்பட்டவுடன் இந்த நாட்டின் பிரச்சினை தீர்ந்துவிடுமா? இல்லையேல் இந்த நாட்டிலுள்ள வன்முறையை முடிவுக்கு கொண்டுவந்து விடுவார்களா என்பதை நான் உண்மையாக அறிய விரும்புகிறேன்.

இந்த நாட்டில் இருக்கக்கூடிய கல்விமான்கள் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிகளில், இருக்கக்கூடிய பல்வேறுபட்ட உறுப்பினர்கள், இராணுவத்தில் இருக்கக்கூடிய பல்வேறுபட்ட முக்கிய தளபதிகள் உட்பட பல்வேறுபட்டோர் இந்த நாட்டின் பிரச்சினைக்கு, அரசியல் தீர்வு இல்லாத வெறும் இராணுவத் தீர்வு இருக்க முடியாது என்பதைத் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் கூறி வந்திருக்கிறார்கள்.

கடந்த 30 ஆம் திகதி கொழும்பு கொட்டாஞ்சேனை விவேகானந்த மண்டபத்திலிருந்த அகதி மக்கள் மிகவும் மூர்க்கத்தனமான முறையில் அவர்களின் விருப்பத்திற்கு மாறாக ஆட்டுமந்தைகள் போன்று பஸ் வண்டிகளில் ஏற்றப்பட்டு மட்டக்களப்புக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளார்கள். அவர்கள் அங்கே நாவலடி என்ற முகாமில் எந்த விதமான கவனிப்புமின்றி தங்க வைக்கப் பட்டுள்ளார்கள். அங்கே அவர்கள் சுகாதார வசதிகளோ மலசலகூட வசதிகளோ அற்ற நிலையில் வைக்கப்பட்டுள்ளார்கள். அதே போன்று இன்று 20ம் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும் மாணிக்கப் பிள்ளையார் அகதி முகாமிலும் இருக்கின்ற ஆயிரக்கணக்கான அகதிகளும் மட்டக்களப்புக்கு போக வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். இல்லையேல் அவர்களும் பஸ் வண்டிகளில் தூக்கியேற்றப்பட்டுக் கொண்டு செல்லப்படுவார்களென்றும் கூறப் பட்டுள்ளது.

இன்று வரையில் தொடர்ந்தும் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் பிடிக்கப்படுகிறார்கள். அது மாத்திரமல்ல: சிவில் உடையில் வரும் கொள்ளையர் தம்மை சி.ஐ.டியினர் என்று கூறிக்கொண்டு அப்பாவித் தமிழ் மக்களை மிரட்டி அவர்களிடம் பணம் பறிக்கும் வேலையும் ஒவ்வொருநாளும் கொழும்பில் சர்வசாதாரணமாக நடந்து வருகின்றது. ஆகவே, இந்த கைதுகள் யுனிபோர்மில் உள்ள பொலிஸாரால் செய்யப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வதுடன் இப்படியான கொள்ளை கூட்டங்கள் அப்பாவித் தமிழ் மக்களைக் கோட்டையிலும் மருதானையிலும் பம்பலப்பிட்டியிலுமாகப் பல் வேறு இடங்களிலும் மிரட்டும் கொள்ளைச் சம்பவங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

(அவசர காலச் சட்ட நீடிப்புச் சம்பந்தமாக பாராளுமன்றத்தில் அண்மையில் நடை பெற்ற விவாதத்தில் எம். பி யான சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆற்றிய உரை.)

* * *

## ஜீவோதயம் பண்ணை மீது குண்டுத்தாக்குதல்

மெதடிஸ்த திருச்சபையின் வளர்ச்சித் திட்டங்களில் ஒன்றான மன்னார்/முருங்கன் பகுதியிலுள்ள ஜீவோதயம் பண்ணை ஜூன் மாதம் 15ம் திகதி காலை விமான குண்டுத்தாக்குதலுக்கு இலக்காகியது. இலங்கை விமானப் படையின் புக்காரா போர் விமானங்களும் சியாஷெற்றி விமானங்களும் இத்தாக்குதலில் ஈடுபட்டிருந்தன. புக்காரா விமானத்திலிருந்து வீசப்பட்ட மொத்தம் ஐந்து குண்டுகள் பண்ணை வயல்களில் வீழ்ந்தன, எனினும் பொருட்சேதம் அதிகம் ஏற்படவில்லை. ஆனால் சியாஷெற்றி விமானத்திலிருந்து வீசப்பட்ட மூன்று மனிதரை தாக்கும் குண்டுகளால் அள்ளி வீசப்பட்ட கொதிக்கும் மண் கட்டிகளும் சன்னங்களும் பண்ணை கட்டிடங்களின் சில பகுதிகளை சேதப்படுத்தின.

விமானப்படைக்குத் தரப்பட்ட தவறான உளவுத் தகவலினாலேயே ஜீவோதயம் குண்டு வீச்சுக்கு இலக்கானது என்று கருதப் படுகிறது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ளதாக கருதி இன்னொரு பண்ணை மீதும் குறிவைக்கப்பட்டிருக்கலாம் என்றும் தவறுதலாக ஜீவோதயம் தாக்கப்பட்டிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் அரசியல்
# அதிகார பரவலாக்கலும் தாயகமும்

டி. சிவராம்

தென்பகுதி தமிழ் மக்கள் மீது இரக்கமின்றி ஏவிவிடப்பட்ட இரத்தக்கறை படிந்த வன்முறைகள் நிகழ்ந்து ஒரு பத்து ஆண்டுகள் நகர்ந்து விட்ட நிலையிலும், இனங்களுக் கிடையில் இணக்கம் காண்பதற்கு உதவக்கூடிய அரசியல் ரீதியான கட்டமைப்புகள் எதுவும் இலங்கையிடம் இல்லை. இலங்கைச் சமூகம் தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளை ஏற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கை தமிழ் மக்களிடமிருந்து விலகி வெகுதூரம் சென்றுவிட்டது. அரைகுறை மனசோடு அரசு அடிக்கடி உறுதிகளை வழங் கினாலும் பாராளுமன்றத் தெரிவுக்குழு எதையாவது தரக்கூடும் என்ற நம்பிக்கை இருப்பதாக அரசியல் உணர்வுள்ள தமிழர்கள் ஏற்கத் தயாராக இல்லை.

**13 வது அரசியல் யாப்புத்திருத்தம் தமிழ்மிதவாதிகளின் நம்பிக்கைக்கு துரும்பாக அமைந்தது**

பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்த பொழுது இனப் பிரச்சினைக்கு ஒரு தேசிய கருத்தொருமைப்பாட்டைக் காண்பதற்கென உருவாக்கப்பட்ட அனைத்துக் கட்சி மாநாடு கோலாகலமாகத் தொடக்கி வைக்கப்பட்ட போதிலும் அது காலப்போக்கில் மெல்லமெல்ல இலகுவாக செயலி ழந்துபோக விடப்பட்டது. தொடக்கத்தில் இருந்த நம்பிக்கை தேய்ந்து விட்டபின்பு பாராளுமன்றத் தெரிவுக்குழுவை வேண்டா வெறுப்பாகவும் ஐயத்துக் கிடமான முறையிலும் கையாண்ட விதம் இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கு பின்னர் வட-கிழக்கில் பிரச்சினை பற்றி சிங்கள அரசியல் வாதிகள் கொண்டிருந்த நம்பிக்கையை மேலும் தேய்வடையச் செய்தது.

சிங்கள அரசியல்வாதிகளிடம் பேச்சுவார்த்தை மூலம் எதையும் பெற்றுக்கொள்ள முடியாது என்ற தமிழ்த்தேசிய வாத இயக்கத்தின் பிரிவினை வாதப்போக்கு இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகி பல ஆண்டுகள் கழிந்த பின்பு மீண்டும் தன் செல்வாக்கை பெற்றுக் கொள்ள கூடிய நிலை உருவாகியுள்ளது. இங்கே வரலாறு மீண்டும் தன் வரலாற்று முத்திரையைப் பதிக்கிறது. அரசுக்கும் தமிழ்த் தலைவர்களுக்கும் இடையில் நிகழக்கூடிய பேச்சுவார்த்தைகளை முறியடிப்பதில் சிங்கள தேசிய வாதிகள் எடுத்துவரும் விடாக்கண்டன் போக்கே 1956 முதல் பிரிவினைவாதம் நிலைப்பதற்கும் வெற்றி காண்பதற்கும் காரணம் என்பது அநேகமாக மறக்கப்பட்டு விடுகிறது. அத்துடன் ஆட்சியில் அமரும் அரசுகள் காணக்கூடியதாகவே கடைப்பிடிக்கும் நல்லெண்ணமற்ற போக்கும் கூட காரணமாகிறது. 1976இல் பிரிவின வாதிகளின் உணர்வுகளுக்கு விட்டுக்கொடுக்க வேண்டிய நிலையில் இருந்த தமிழ் மிதவாதிகள் 13-ஆவது அரசியலில் யாப்புத்திருத்தம் கொண்டுவரப்பட்ட போது சிங்களவர்கள் மத்தியில் இருந்த நிதானப் போக்கு டையவர்களைப் பற்றிய ஒரு நல்லெண்ணத்தை தமிழர்கள் மத்தியில் உருவாக்குவதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பத்தை பெற்றனர். பிரேமதாசாவின் விதிவிலக்கான அழுத்தமான ஆறுதல் அளிக்கும் போக்கு இந்த நம்பிக்கைக்கு உறுதியைத் தந்தது. தமிழ் மிதவாதிகள் இன்று மீண்டும் சங்கடமான நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டார்கள்.

ஒரு பல்லின மக்கள் வாழ்கின்ற நாடு என்ற சூழலில், தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளை ஓரளவேனும் இணக்கப்பாட்டுக்கு கொண்டுவர ஓரே ஒரு உறுதியான அடிப்படை உண்டு. அதுதான் 13-ஆவது அரசியல் யாப்புத்திருத்தமாகும். தமிழ் மிதவாதிகளின் நம்பிக்கைக்கு இதுவே இன்னும் கூடைத்த துரும்பாக அமைந்திருக்கிறது. பிரிக்கப்படாத வட-கிழக்கு மாகாணத்தில் மீண்டும் ஒரு மாகாணசபையை அமைக்க அரசு அனுமதி வழங்குமானால், அதிகாரப் பரவலாக்கலை மேலும் சீர்செய்ய அது ஒரு படிக்கல்லாக அமையலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினால் நிருவகிக்கப்பட்டு வந்த வட-கிழக்கு மாகாணசபை சடுதியாக கலைக்கப்பட்ட பின்னர் காலத்துக்கு காலம் 13-வது அரசியல் யாப்புத்திருத்தம் வலுவிழக்கச் செய்யப்பட்டுவந்துள்ளது. தில்லியின் உதவியுடன் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கடுமையாக முயற்சித்து மாகாண சபைக்கு பெற்றுக்கொடுத்த அதிகாரங்கள் முதலமைச்சர் பெருமாள் இந்தியாவுக்கு சென்ற பின்னர் பறிக்கப்பட்டுவிட்டன. கமநல சேவைகள் சட்டம் இதற்கு ஒரு நல்ல உதாரணமாகும். 1988 முதல் மாகாண சபைகள் நாடு முழுவதும் இயங்கி வந்த போதும், அவை ஆளும் கட்சியால் நிருவகிக்கப்பட்டு வந்ததால், அதிகார பரவலாக்கல் என்ற பிரச்சனை எழவில்லை. அவர்களுக்கு சாதகமான இலங்கை மக்கள் கட்சி எதிரணியில் இருந்தாலும் பெரும் சிக்கல் எதுவும் இருக்கவில்லை. மேல்மாகாண வளர்ச்சியிலும் நிர்வாகத்திலும் அரசை விஞ்சிச் செயற்பட வேண்டுமானால், அதன் ஆட்சியில் பொறுப்பை ஏற்றுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அதிகார பரவலாக்கலை சிறிதேனும் முன்னேற்ற நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கை மிதவாத தமிழர்கள் மத்தியில்

**வட-கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டபின்னர் 13வது அரசியல் யாப்புத்திருத்தம் வலுவிழக்கச் செய்யப்பட்டுள்ளது.**

அண்மைக்காலமாக குடிக்கொண்டுள்ளது. இந்த மாகாணத்திலேதான் நடுவண் அரசும் அமைந்துள்ளது. தவிர்க்க முடியாமலும் தேவைப்பட்டாலும் சட்டம் ஒழுங்கு போன்ற முக்கிய விடயங்கள் நடுவண் அரசிடமே இருக்கமுடியும். நகராண்மையும் தொழில் மயமும் கொண்ட மேல்மாகாணத்தில் காணி, காணிப்பங்கீடு போன்ற மற்ற விடயங்கள் முக்கியமானவை அல்ல. இந்திய - இலங்கை ஒப்பந்தமும், 13 ஆவது அரசியல் யாப்புத் திருத்தமும் வட-கிழக்கில் வாழும் தமிழர் நலன்கருதி உருவாக்கப்பட்டவை என்பது கருத்திற் கொள்ளப்பட வேண்டும். மாகாண சபை அதிகாரங்கள் முக்கியமாக தமிழ்கட்சிகள் தீவிரவாதக் குழுக்கள் கோரிக்கையின் அடிப்படையில் வகுக்கப்பட்டன. ஆயினும் அன்றும் ஆட்சியில் இருந்த அரசு தனது இறைமை வட-கிழக்கில் பாதிக்கப்படாது அமையவேண்டும் என்ற எதிர்ப்பையும் சமாளித்து உள்ளடக்கியதாகவே அதிகாரங்கள் வகுக்கப்பட்டன. ஆதலால் தமிழர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்கள் மேலாதிக்கம் கொண்ட ஒரு மாகாணசபை முழு ஆட்சிக் காலத்துக்கும் இயங்கினால் மட்டுமே 13வது அரசியல் யாப்புத்திருத்தம் வழங்கும் அதிகாரப் பரவலாக்கலை சீர் செய்ய முடியும் என்று வாதிக்கப்படுகிறது. ஒராண்டுக்காலம் ஆட்சியில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை நடுவண் அரசு உள்ள அதிகாரங்களையே நடைமுறைப்படுத்த விடாது தடுத்து வந்த அனுபவத்தை பார்க்கும் போது இதுவும் வெற்று சனவாகவே அமைந்து விடலாம். நடுவண் அரசை இசைய வைக்க முயற்சித்தும் அச்சுறுத்தியும் பயனற்றுப் போகவே ஈம. விமு திலியை நாடுவதைத்தவிர வேறு வழி இருக்கவில்லை. தேவையான அதிகாரங்களை செயற்படுத்துவதில் போடப்பட்ட முட்டுக்கட்டைகள் தொடர்பாக ஈம.விமு சமர்ப்பித்த அறிக்கை 1956 இல் இருந்தது போலவே அதிகாரத்தை பரவலாக்க நடுவண் அரசுக்கு எள்ளளவும் மனமில்லை என்பதைக் காட்டுகிறது.

இந்தக் கருத்தை மறுப்பவர்கள் மொழிப்பிரச்சினை தீர்க்கப்பட்டதாகக் காட்டலாம். ஆனால் இது அந்நேரம் இலங்கை மக்கள் விருப்புக்கு மாறாக இந்தியாவால் திணிக்கப்பட்டதாகக் கருதப்பட்டது என்பதை மறந்து விடலாகாது. நீண்டநாள் பழக்க தோஷமோ என்னவோ, ஒப்பந்தத்தினால் தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டியவற்றைத் தாம் அனுபவிப்பதில் ஆர்வம் உள்ளவர்களாக மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் காண்பிக்கிறார்களே தவிர பேச்சுவார்த்தை மூலம் 13வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வழிகாண்பதில் அக்கறை காட்டவில்லை என்பதை சிங்கள அரசியல் வாதிகள் உணர வேண்டும். வட-கிழக்கை பிரிப்பதில் பாராளுமன்றத் தெரிவுக்குழு காட்டும் அக்கறை ஒரு நல்ல உதாரணமாகும். கிழக்கை பிரிப்பதற்கான முயற்சியில் தெரிவுக்குழுத் தலைவரின் மறைமுக ஆதரவுடன் தென்பகுதியில் உள்ள பல்வகை மக்கள் அதனை ஆவலுடன் அணைத்துக்கொண்டு கீழ்தரமான முறையில் வலியுறுத்திய நிலையில் தமிழர்கள் எதிர்பார்ப்பதற்கு எதுவும் இல்லை. 1986 இல் ஒரு தமிழ் அறிவாளர் கீழ்வருமாறு கூறினார்.

"1983 ஜூலை கலவரங்களை நுணுக்கமாகவும் வரலாற்று ரீதியாகவும் பார்க்கும் போது அந்த ஆண்டுதான் தமிழர்கள் தாங்கள் எதைத் தங்களது தாயகப் பிரதேசம் என்று கருதி வந்தார்களோ அந்த மண்ணைத்தவிர வேறெந்த இடத்தையும் ஐயத்துக்கு இடமின்றி தாம் வாழக்கூடிய இடமாகக் கருத முடியாது என்ற படிப்பினையை முடிந்த முடிவாகக் கற்றுக் கொண்டனர். தாங்கள் வாழ்ந்த இடங்களில் வீடுவாசல்களைக் கைவிட்டுத் தங்கள் பாரம்பரிய இடங்களில் பெருமளவில் தஞ்சம் புகுந்தனர். ஆதலால் இனத்துவ முரண்பாட்டு வரலாற்றில் இலங்கைத் தமிழர்கள் வட-கிழக்கிலேயே தஞ்சம் புகலாம் என்ற உண்மையை நிலைநாட்டியதில் 1983 முக்கியத்துவம் பெறுகிறது. இது மலையகத் தமிழர்களுக்கும் பொருந்தும் ஏனெனில் 83 இல் மட்டுமன்றி எழுபதுகளின் நடுக்கூற்றிலும் கடைக்கூற்றிலும் கூட மலையகத்திலிருந்து இடம் பெயர்ந்தவர்களும் வசதிபடைத்த வர்களும் வடக்கு கிழக்கு மாவட்டங்களில் புகலிடம் கேட்க நேர்ந்தது."

ஏதோ நம்பிக்கையை வைத்துக்கொண்ட ஏனையவர்களைப் போல அவரும் மேலும் கூறுகையில் "தமிழர்கள் கருத்துப்படி 83க்கு பிற்பட்ட காலப்பகுதிதான் அரசியல் அங்கீகாரத்தோடும் அரசியல் யாப்பின் ஏற்புடைமைக்கு அமைவாக வட கிழக்கில் ஒட்டிக்கொள்ள எடுக்கும் முயற்சியின் வரலாறுமாகும்" என்று கூறினார்.

இந்த முயற்சியை முறியடிக்கும் முக்கிய கருவியாக பாராளுமன்றத் தெரிவுக்குழு காட்சி தருவது ஜூலை 93 ல் மிக துரதிர்ஷ்டவசமானது.

* * *

---

# மேலாடையும் மூட்டுத்துண்டும்

பெர்டோல் பிரெக்ட்

எப்போதெல்லாம் எங்கள் மேலாடை
கந்தலாகிக் கிடக்கின்றதோ
அப்போதெல்லாம் நீங்கள் ஓடி வருகிறீர்கள்
"சேச்சே ... இந்நிலை நீடிக்க விடுவதா?
எப்படியெல்லாம் உதவ முடியுமோ அப்படியெல்லாம்
உங்களுக்கு உதவி செய்வோம்" என்று முழங்கி
கங்கணம் கட்டிக் கொண்டு
உங்கள் தலைவர்களிடம் நீங்கள்
வரிந்து கட்டிக் கொண்டு ஓடுகிறீர்கள்
நாங்கள் நலிந்து வாடி நிற்கிறோம்
வெற்றிப் பெருமிதத்தோடு நீங்கள் மீண்டும் வருகிறீர்கள்
எமக்காக நீங்கள் வென்றெடுத்ததை எங்கள் முகத்தின்
முன்னால் ஆட்டுகின்றீர்கள்
ஒரு மூட்டுத்துண்டு

மூட்டுத்துண்டு அது நல்லது தான்
ஆனால்
எங்கள் முழு ஆடை எங்கே?

எப்போதெல்லாம்
நாங்கள் பசியால் ஓலமிடுகிறோமோ
அப்போதெல்லாம் நீங்கள் ஓடிவருகிறீர்கள்
சேச்சே இந்நிலையை இனியும் நீடிக்கா விடுவதா?
எப்படியெல்லாம் உதவமுடியுமோ அப்படியெல்லாம்
உங்களுக்கு உதவிசெய்வோம் என்று முழங்கி
கங்கணம் கட்டிக்கொண்டு
உங்கள் தலைவர்களிடம் நீங்கள்
வரிந்து கட்டிக் கொண்டு ஓடுகிறீர்கள்
பட்டினியில் வாடும் நாங்கள் தவித்து நிற்கிறோம்
வெற்றிப் பெருமிதத்தோடு நீங்கள் மீண்டும் வருகின்றீர்கள்
எமக்காக நீங்கள் வென்றெடுத்தை எங்கள் முகத்தின்
முன்னால் ஆட்டுகின்றீர்கள்
ஒரு துண்டு பாண்
பாண் துண்டு அது நல்லது தான்
ஆனால் முழுதான பாண் எங்கே?

மூட்டுத்துண்டுகள் மட்டும் எமக்கு போதாது
முழு மேலாடையும் எமக்கு வேண்டும்
பாண் துண்டு மட்டும் எமக்குப் போதாது
முழுதான பாணும் எமக்கு வேண்டும்
தொழில் மட்டும் எமக்கு போதாது
முழுத் தொழிற்சாலையும் தேயிலையும்
இயந்திரமும்
அரசியல் அதிகாரமும் வேண்டும்
நல்லது அதுதான் எங்கள் எல்லோருக்கும் தேவை
ஆனால்
நீங்கள் எங்களுக்கு தருவதென்ன?

தமிழில் 'ஜோ"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை பேராயர் கென்னத் பர்னாந்து சந்தித்தார்.

கொழும்பு (ஏ.ஈ.என்.எஸ்.) இரண்டு ஆண்டுகள் தனிமையில் இருந்து கச்சிதமாய் விலகிக்கொள்ளும் புரட்சித் தமிழ்த் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அண்மையில் திருநிலைப் படுத்தப்பட்ட அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு பேராயர் அதி.வண.கென்னத் பர்னாந்து அவர்களுடன் கலந்துரையாட வெளிவந்தமை இலங்கையில் இரத்தக் களரியை ஏற்படுத்திய இனமோதல்களால் போரிட்டுக் கொண்டிருக்கும் இருபகுதியும் பேச்சுவார்த்தையில் இறங்கக்கூடும் என்ற புதிய நம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளது.

இந்த சந்திப்பு தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. பேராயர் அவர்கள் முன்னதாக இலங்கையின் தேசிய கிறிஸ்தவ சபையின் இணை பொதுச் செயலாளர் வணகலாநிதி ரியென்சி பெரேரா அவர்களுடன் இராணுவத்தடை விதிக்கப்பட்ட ஒரு வலயத்திலுள்ள கடலை, புலிகளின் பாதுகாப்புடன் வெற்றிகரமாக கடந்து சென்றார். யாழ்ப்பாணத்தின் ரோமன் கத்தோலிக்க ஆயர் வண. தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களும், தென்னிந்திய திருச்சபையின் யாழ் மறை மாவட்ட ஆயர் அதி வண. ஜெயம் அம்பலவாணர் அவர்களும் பேராயர் பர்னாந்து அவர்களுடன் புரட்சித் தலைவருடனான பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அரச பாதுகாப்பு படைகளுடன் இரத்தமயமான போரைத் தீவிரப்படுத்தி வந்திருக்கிறார்கள். அத்துடன் வட-கிழக்கில் ஒரு சுதந்திரமான தனிநாட்டை அமைப்பதற்கு போராடி வருகிறார்கள். வட முனையில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் குடாநாடு இன்று புலிகளின் இறுக்கமான கட்டுப்பாட்டுக்குள் இருந்தாலும் சுற்றிவர பாதுகாப்புப் படையினரால் சூழப் பட்டிருப்பதுடன் அங்கு அவர்களால் ஒரளவு பொருளாதாரத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் யாழ்ப்பாணத்தைக் கடல் வழியாகத்தான் அடையமுடியும். ஆயினும் அந்த வழி இராணுவத்தால் தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. பேராயர் இப்பகுதியை கடந்து செல்வதற்கு ஐந்து நாட்களுக்கு முன்னதாக 30 வரையிலான பொதுமக்கள் இலங்கை கடற்படைத் துப்பாக்கி படகுகளால் கூட்டுத்தள்ளப்பட்டனர். அப்போது அந்த அப்பாவி மக்கள் சிறுபடகுகளில் கடலைக் கடந்து கொண்டிருந்தனர். பொதுமக்கள் பயணத்துக்கு நெடுஞ்சாலை திறந்துவிடப்பட்டுள்ளதாக இராணுவத்தினர் கூறுகின்றனர். ஆயினும் அதை அனுமதித்தால் யாழ்ப்பாணத்தின் மீது தாக்குதல் நடத்துவதற்கு இராணுவம் பயன்படுத்த வழிவகுக்கும் என்று புலிகள் கூறுகின்றனர்.

அவர் சுடப்படக்கூடிய ஆபத்தை எதிர்நோக்க வேண்டிவரும் என்பதால் இந்த பயணத்தை மேற்கொள்ள வேண்டாம் என்று பேராயர் அவர்கள் கூட்டுப்படைத் தலைமையகத்தால் பகிரங்கமாக எச்சரிக்கப்பட்டார். அவர் புறப்பட இருந்த நாளுக்கு முதல் நாள் பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் 5வது பிரிவின் கீழ் ஜனாதிபதி பிரேமதாசாவால் அறிக்கப்பட்ட ஏற்பாடுகளின்படி குறிப்பிட்ட கடல் வழி தடைசெய்யப்பட்டது.

புலிகள் தலைவர் "பேச்சுவார்த்தை மூலம் ஒரு அரசியல் தீர்வைக்காண" விருப்பம் உடையவராகக் காணப்படுவதாக பேராயர் அவர்கள் பத்திரிகைகளுக்குத் தெரிவித்தார்.

"தமிழ் மக்களின் பாதுகாப்பு உட்பட தமிழ் மக்களின் மொழி, பண்பாடு, தாயகம் என்பன பாதுகாக்கப்படக்கூடிய" போது மான மாற்றீடு முன்வைக்கப் படுமானால் தனித்தமிழ் நாட்டுக் கோரிக்கையைத் தமிழீழ விடுதலைப் புலிகள் வலியுறுத்த மாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டதாகவும் சொன்னார். தமிழர் தாயகக் கோட்பாட்டுக்குப் பதிலாக தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பகுதிகளுக்குப் பாதுகாப்பான வழிமுறைகளை காண்பதுவே அந்தமுள்ள நடவடிக்கை என்று தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவருக்கு பேராயர் எடுத்துக் கூறினார். தமிழ் மக்களின் நலன்பேணும் எந்த வழிவகைகளையும் நடை முறைப்படுத்தும் அரசியல் உறுதிப்பாடு அரசுக்கு இருக்குமா என்ற சந்தேகத்தை எழுப்பிய புரட்சிக்குழுத் தலைவர் எப்படி இருப்பினும் இலங்கைப் பாராளு மன்றத்தின் தெரிவுக் குழுவால் முன்வைக்கப்படக்கூடிய இடைக்கால முன் மொழிவுகளை ஆராய இணக்கம் தெரிவித்தார்.

தெரிவுக் குழுவின் முன்மொழிவுகள் இணைப்பாட்சி முறையை (சமஷ்டி) உள்ளடக்கி இருந்தாலும் வடக்கை இரண்டு தனித்தனி அதிகாரப்பிரிவுகள் ஆக்கும் திட்டத்தையும் கொண்டதாக உள்ளது. வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்ட ஒரேநிர்வாக அலகாக இருக்க வேண்டும் என்பது தமிழ் அரசியல் கட்சிகளினதும் குழுக்களினதும் வற்புறுத்தலாகும்.

இலங்கையின் 170 இலட்ச மக்கள் தொகையில் 17% கொண்ட இலங்கைத் தமிழர்களில் பெருமளவினர் தீவகற்பத்தின் வடகிழக்கிலேயே வாழ்கின்றனர். கிழக்கு மாகாணத்தில் குறிப்பிடக் கூடிய அளவில் முஸ்லிம் சிங்கள மக்கள் வாழ்கிறார்கள். பெரும்பான்மைச் சமூகத்தை சேர்ந்த சிங்களவர்கள் அனேகமாக பௌத்தர்கள். அதே நேரத்தில் எல்லா இந்துக்களும் தமிழர்களே. கிறிஸ்தவர்கள் 7% ஆனவரே. அவர்களுள் சிங்களவர்களும் தமிழர்களும் அடங்குவர். ஒன்றுடன் ஒன்று ஒட்டாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுப்பட்ட முட்டி மோதும் தேசிய செயல் போக்கின் மத்தியில் திருச்சபை மேலும் மேலும் நுண்ணிய போக்கை கடைப்பிடித்தும் கூட துரோக கும்பல் என்ற பெயர் வாங்கவும் நேரலாம்.

1990 ஜூன் மாசம் முதல் தமிழீழ விடுதலை புலிகளால் சிறைப் பிடிக்கப்பட்டு வைக்கப் பட்டிருந்த இலங்கைப் பொலீஸ்காரர்கள் இருவரை விடுவித்துக் கொண்டு வந்த பேராயர் அவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களின் பரிதாப நிலைக்கு அரசையும் புலிகளையும் குறை கூறினார். புரட்சியாளர்கள் சிறைப்பிடித்தவர்களை விடுவித்தது இதுவே முதல் தடவையாகும். இதனை ஒரு "நல்லெண்ணத்தின் அறிகுறி" என்று பேராயர் அவர்கள் கூறினார். முரண்பாட்டை முடிவுக்குக் கொண்டுவர வழிவகுக்கும் பேச்சு வார்த்தையை தொடக்க நடவடிக்கை எடுக்கவேண்டிய பொறுப்பு இனி தெற்கில் உள்ள அரசாங்கத்தைச் சார்ந்தது என்று அவர் மேலும் சொன்னார். பேச்சு வார்த்தைகளைத் தொடக்குவதற்கு வேண்டிய சூழ்நிலையைத் தோற்று விக்கூடிய வகையில் வடக்குக்குக் கொண்டு செல்லத் தடை செய்யப்பட்ட பொருட்கள் மீதான தடையைத் தளர்த்துவதுடன் யாழ் குடாநாட்டுக்கு செல்ல ஏதுவான ஒரு வழியை திறந்துவிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். யாழ்ப்பாணத்தில் இருந்து திரும்பிய பின் பத்திரிகையாளருடன் பேசிய பேராயர் அவர்கள் பேச்சு வார்த்தைக்கு முன் நிபந்தனை எதுவும் விதிக்கக்கூடாது என்று கூறினார். போர் நிறுத்தம் ஒன்று அறிவிக்கப்பட்டால் பேச்சு வார்த்தைக்கு வரத்தயாராக இருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்த பொழுதிலும் பேச்சுவார்த்தை தொடங்குமுன் ஆயுதங்களை கீழே போட வேண்டும் என்று அரசாங்கம் வலியுறுத்துகிறது.

இந்த முரண்பாட்டை மோசமாக்கிய கீழ்த்தர அரசியல் போக்கையும் பொறுப்பற்ற ஆவேச மூட்டும் பத்திரிகைச் செய்தி களையும் பற்றிக் குறிப்பிட்ட கூடவே சென்ற இலங்கையின் தேசிய கிறிஸ்தவ சபையின் இணைச் செயலாளர் வண. கலாநிதி ரியெனர்சி பெரேரா அவர்கள் செயற்படும் தீய சக்திகளை புரிந்துக்கொண்டு சிங்கள தமிழ் சமூகங்களிடையே நிலவும் சமாதான விரும்பிகளின் உறவை பலப்படுத்தவேண்டும். இந்த வெற்றி கண்டது கிறிஸ்தவ குழுவானாலும் இனி சமாதான முயற்சிகளை பல்சமய குழுவே முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்றும் கூறினார். வருங்கால முயற்சிகள் பல் சமய குழுக்கள் மூலம் செயற்பட்டாலும் அரசின் சுருத்தும் பெறப்படும். இனிச் செல்லும் தூதுக் குழுக்களில் பௌத்த கிறித்தவ துறவிகள் குழுக்களுடன் சாதாரண பொது மக்களும் சேர்த்துக் கொள்ளப் படுவர்.

**மாணவியின் வேண்டுகோள்**

***பேராயர் அவர்களே! நாங்கள் படிப்பதற்கு எமக்கு கொஞ்சம் குறிப்பு புத்தகம் அனுப்பி உதவ முடியுமா?***

***– இது பேராயர் பர்னாந்துவிடம் யாழ்ப்பாணத்தில் வைத்து ஒரு 5ம் வகுப்பு மாணவி விடுத்த வேண்டுகோள்***

## நம்பிக்கையின் திருவுருவாய் பேராயர் திகழ்ந்தார்.

***– யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தலைவர்.***

'இந்த பாழாய்ப்போன போர் தொடங்கிய பின் பிறந்த தமிழ்ப் பிள்ளைகள் இராணுவத்தினரை தவிர வேறெந்தச் சிங்களவரையும் காணவில்லை. சிங்களவர்கள் எப்படி இருப்பார்கள் என்று எனது மருமகன் என்னைக் கேட்டான். ஈழப்போர் -2 தொடங்கிய பின்னர் ஆயர் கென்னத் பர்னாந்து அவர்களின் வருகை அமைதிக்கு நம்பிக்கைச் சின்னமாக" காணப்படுகிறது என்று யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் கலாநிதி ஏ.ஜே.வி. சந்திரகாந்தன் தெரிவித்தார்.

'மக்களுக்கு அமைதி வேண்டுமானால் மனிதனில் உள்ள இயல்பான நல்லதன்மை வளர்க்கப்பட வேண்டும். ஆயர் அவர்கள் செய்ய எத்தனித்தது இதைதான் என்று அவர் மேலும் சொன்னார்.

'வடக்குக்கும் தெற்குக்குமிடையே தொடர்பு இன்றில்லை. அந்நியப்படுத்தல் முழுமையாகி விட்டது. வடக்கில் உள்ளவர்கள் தெற்கில் உள்ள மக்களை காண விரும்புகிறார்கள். பேராயர் அவர்கள் யாழ்ப்பாணம் வந்த பொழுது ஆயிரமாயிரம் மக்கள் அவரை காணச் சந்து பொந்தெல்லாம் குழுமியிருந்தனர். ஏனெனில் நீண்டகாலமாக ஒரு தகுதியான சிங்களவரை அவர்கள் கண்டதில்லை சமாதானத்தூதில் வந்த ஒரு சிங்களவராக அவரைக் கண்டனர்

*நாட்டாரியல்*

## நாட்டார் யார்?

"நாட்டார் " என்பது யாரைக் குறிக்கின்றது என்பது பற்றிய திட்டவட்டமான அறிவுத்தெளிவு இருத்தல் அவசியம்.

"நாட்டார்" என்பது இங்கு ஃவோக் (Folk) என்பதற்கான மாற்றீடு (transference) ஆகும். அதாவது இதுவெறும் மொழிபெயர்ப்பு (translation ) அன்று. "நாட்டார்" என்பது இங்கு ஒரு கலைச்சொல் ( glossary term ) ஆக, மற்றைய மொழிகளில் குறிப்பாக ஆங்கில எழுத்துப் பாரம்பரியத்தில் வரும் "ஃவோக்" " (Folk) என்பதற்கான தமிழ் வடிவமாகும். அதாவது மூலமொழியில், இந்த "ஃவோக்" " (Folk) எவற்றையெல்லாம் குறிக்கின்றதோ, அவற்றை "நாட்டார்" என்ற சொல்லுக்கு மாற்றி (transfer)விடுகின்றோம். (catford)

ஐரோப்பிய பாரம்பரியத்தில், ஜேர்மனியர் நிலையிலேயே இப்பயில்துறை பற்றிய சிரத்தை ஆரம்பித்ததென்பர். அம்மொழியில் "volk" (வோஃக் ) என்பது சாதாரண மக்கள் யாவரையும் சுருதும் அத்துடன் ஒரு சமூகக் குழு நிலைப்பாட்டையும் ( community) உணர்த்திநிற்கும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழில் மயப்பாடு காரணமாக ( industrialisation ) சமூகக் குழு நிலையில் வாழ்க்கை முறையில் மாற்றங்கள் ஏற்படத்தொடங்கிய பொழுது அந்த நிலைக்கு முன்னர் நிலவிய குழு வாழ்க்கை பற்றிய சற்று மனோரதியப்படுத்தப்பட்ட நிலையில் தரவுகளை மீட்டுக்கொள்வது இயல்பாயிற்று. மறைந்து சென்று கொண்டிருந்த சனரஞ்சமான பழைமைகளை (popular antiquities ) குறித்துவைக்கத் தொடங்கினர்

*[ஆகஸ்ட்மாதம் கொழும்பில் நடைபெற்ற ''நாட்டாரியல்''. கருத்தரங்கில் யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆற்றிய உரையிலிருந்து.]*

* * * * * * * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய ஏற்பாட்டில் நீதியும் சமாதானமும்

—ஞான இராபின்சன்

## நீதி ஓர் உறவு சார்ந்த கருத்து

எபிரேயத்தில் ட்செடாக்கா என்ற சொல் நீதி என்று தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. சமுதாயத்தில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உறவின் நியதிகளுக்கு கட்டுப்பட்டு உண்மையாக நடந்து கொள்ளல் என்பதே அதன் பொருள். இதனை விளக்க திருமறையில் கூறப்படும் இரண்டு நிகழ்ச்சிகளைச் சுட்டிக் காட்டலாம்.

முதல் நிகழ்ச்சி ஆதி.38.12.26.-இல் காணப்படுகிறது. இங்கு யூதாவின் மருமகள் தாமார் செய்த ஒரு செயல் கூறப்படுகிறது யூதாவின் மகன், தாமாரின் கணவர் இறந்து போகிறார். யூதாவின் இளைய மகன் ஒருவன் இருக்கிறான். அவன் திருமண பருவம் மட்டும் தாமார் காத்திருக்கிறாள். ஆனால் இளையவன் வளர்ந்ததும் யூதா அவனுக்குத் தாமாரை திருமணம் முடித்து வைக்கவில்லை. யூத சமூக ஒழுங்கின் படி இப்படி ஒரு சகோதரன், திருமணமாகி சந்ததி இல்லாமல் இறந்துவிட்டால் இறந்தவரின் சகோதரர்களில் ஒருவர், அல்லது இறந்தவருக்கு இரத்த உறவான ஒருவர் இறந்தவரின் மனைவியான விதவையின் மூலம் இறந்தவருக்கு ஒரு சந்ததியை உண்டாக்க வேண்டும். இது அவர்களின் நியாயமான கடமை.

யூதா தன்னை கணவரின் சகோதரர்களில் ஒருவருக்குத் தராதிருக்கவே இறந்து போன தன் கணவருக்குத் தான் செய்ய வேண்டிய கடமையை தாமார் நினைத்துப்பார்க்கிறாள். அதற்காக தன்னையே அழிக்கத்தக்கதான ஆபத்து நிறைந்த ஒரு தந்திர செயலில் ஈடுபடுகிறாள். ஒரு வேசியின் வேஷம் தரித்து தன் மாமனார்யூதாவை ஏமாற்றி அவன் மூலமாக கருத்தரித்தாள். இப்படி தவறான செயலில் ஈடுபடுகின்ற ஒரு பெண் கல்லெறிந்து கொல்லப்படுவது சமூக ஒழுங்கு. தாமாரின் கர்ப்பம் வெளியில் தெரியவந்தவுடன் விசாரணை நடக்கிறது. தாமார் தகுந்த ஆதாரங்களுடன் தன் கர்ப்பத்திற்குக் காரணம் யூதாவே என்பதை நிரூபிக்கிறாள். அதன் மூலம் தான் அப்படிப்பட்ட ஒரு இழிச் செயலில் இறங்க வேண்டியதன் நிர்ப்பந்தத்தையும் மறைமுகமாக எடுத்துக் காட்டுகிறாள். இறந்து போன தன் கணவருக்கு சந்ததி உண்டாக்கவே அவள் இப்படி நடந்து கொள்ள வேண்டியிருந்தது. இந்த கட்டத்தில் யூதா கூறுகிறார்: அவள் என்னைவிட நீதியானவள், இறந்து போன தன் மகனுக்கு வாரிசு உண்டாக்கும் அந்தச் சமூக பொறுப்பிற்காக அந்த செயலில் ஈடுப்படுகிறாள். அது அவளுக்கு நீதியாகிறது. அதாவது அவள் தன் கணவனோடு உள்ள உறவில் உண்மையாயிருந்தாள். இறந்து போன தன் கணவருக்கு செய்யவேண்டிய கடமையைச் செய்து நிறைவேற்றினாள் என்பதே இதன் பொருள்.

இன்னொரு நிகழ்ச்சி 1 சாமு 24: 1-19-இல் காணப்படுகிறது. இங்கு சவுல் தாவிதைக் கொல்லும்படி துரத்தி வருகிறார். ஆனால் ஒர் இடத்தில் சவுல் தாவீதின் கையில் சிக்கிக் கொள்கிறார். தாவீது விரும்பியிருந்தால் அப்போது சவுலைக் கொன்றிருக்கலாம். ஆனால் தாவித சவுலை கொல்லாமல் காப்பாற்றுகிறார். உண்மையை உணர்ந்த சவுல் தாவீதைப் பார்த்து நீ என்னைவிட நீதியுள்ளவன் என்றார். (வ17) அதாவது, அரசனான சவுல் குற்றமற்ற தன் மக்களை காப்பாற்ற கடமைப்பட்டவன். ஆனால் சவுல் அதில் தவறிவிட்டான் : குற்றமற்ற தாவீதை கொல்ல வகைத்தேடுகிறான். குடிமகனான தாவீது அபிஷேகம் பண்ணப்பட்ட அரசன் மேல் கைபோடாதிருக்கக் கடமைப்பட்டவன்: சவுலால் தன் உயிருக்கு ஆபத்து வரும் என தெரிந்தும் தாவீது தன் கடமையிலிருந்து தவறவில்லை. ஆகையால் சவுல் "நீ என்னைவிட நீதியுள்ளவன் " என்று கூறுகிறார். அதாவது தாவீது குடிமகனாக தனக்குள்ள சமூக உறவில் உண்மையுள்ளவனாயிருந்தான்.

நீதி உறவு சார்ந்த ஒரு கருத்து என்பதில் மூன்று முக்கிய உண்மைகள் அடங்கி இருக்கின்றன.

1. உறவுகளும் உறவின் நியதிகளும் இடத்துக்கு இடம் வேறுபடுவதால் (எ.கா .இந்தியாவில் ஒரே மனைவி நியதி. ஆப்பிரிக்காவில் பல மனைவியர் நியதி) எல்லா இடத்திற்கும் பொதுவான ஒரு நீதிச் சட்டமோ ஒழுங்கோ இருக்க முடியாது.

2. உறவுகளும் காலத்துக்குக்காலம் மாறுபடுவதால் (எ.கா. கடந்த கால ஆண்டான் - அடிமை உறவு : கோமகன் - குடிமகன் உறவு) எல்லாக் காலத்துக்கும் பொதுவான ஒரு நீதிச்சட்டமோ, ஒழுங்கோ இருக்க முடியாது.

3. நீதி, சூழல் தழுவியது. காலத்தையும் இடத்தையும் பொறுத்தது. குறிப்பிட்ட ஒரு காலத்தில் குறிப்பிட்ட ஓர் இடத்தில் நீதி எது என்பதைப் பகுத்தறிந்து சட்டங்களையும நியதிகளையும் வகுப்பது நமது கடமை.

இப்படி நடக்கும் இடம், காலத்திற்குக்காலம் நீதிச் சட்டங்கள் மாறுபடுமானால் கடவுளுக்கு உகந்த, ஏற்புடைய நீதி எது என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது என்ற கேள்வி எழலாம். ஒரு நீதி ஏற்புடையதா இல்லையா என்பதை எவ்வாறு கண்டுபிடிப்பது? மனிதனே அளவுகோலாகக் கொடுக்கப் படுகின்றான் (மாற்கு 2:27), எந்த ஒரு நீதி அமைப்பு மனித வாழ்வுக்கு நலமானதாக அமைகிறதோ அந்த அமைப்பு ஏற்புடையதாக இருக்கலாம். முழுமையான மனித வாழ்வை எப்படிக் கண்டுகொள்வது என்பதற்கு "இயேசு கிறிஸ்து" அளவுகோலாக இருக்கிறார்.

## நீதியின் பிறப்பிடம் கடவுள்

அவர் நாட்களில் யூதா இரட்சிக்கப்படும்,

இஸ்ரவேல் பயமின்றிக் குடியிருக்கும்;

கர்த்தர் நமது நீதி என்பதே அவருக்கு நாமம்.

(எரேமியா 23:6)

பொல்லாதவன் பிழைத்திருக்க விடார்.

எளியோருக்கு நியாயஞ் செய்கிறார். (யோபு 36:3)

கடவுளே ராஜாவுக்கு உமது நியாய தீர்ப்புகளையும்

ராஜகுமாரனுக்கு உமது நீதியையும் கட்டளையிடும்,

அவர் உமது ஜனத்தை நீதியோடும்

உம்மைச் சேர்ந்த சிறுமையானவர்களை நியாயத்தோடும்

விசாரித்து வருவார். (சங்கீதம் 72:1-2)

அவர் எனக்குப் புது உயிர் கொடுக்கிறார்,

தமது நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில்

நடத்துகிறார். (சங்கீதம் 23:3)

கடவுளோடு உறவு சரியாக இருந்தால் மனிதரோடுள்ள உறவுகளும் சரியாக அமையும் (ஆமோஸ் 4:4-5; 5:21-24; மீகா 6:6-8; ஏசாயா 1:12-17; 58:26-28) ஒரே கடவுள், எல்லோருக்கும் தந்தையானவர் (மல்கியா 2:10), கடவுள் படைத்த ஒரே மனுக்குலம் எல்லோரும் சகோதர, சகோதரிகள் (ஆதி. 1:27மூ சங் 8:4மு) கடவுள் படைத்த உலகம் எல்லோருக்கும் பொதுவானது (சங். 24:1) எல்லோரையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ள கடவுள் (ஏசயா 46:6மு 49: 6மு) - இவையே நீதியான உறவுகளுக்கு ஆதாரம்.

## நீதியும் சமாதானமும்

எபிரேயத்தில் "ஷாலோம்" என்ற சொல் சமாதானம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது நீதி நிலவும் ஒரு சூழலைக் குறிப்பிடுகிறது. சண்டை சச்சரவுகள் அற்று எல்லோரும் அன்புற்று வாழும் ஒருசூழலை மீகா தீர்க்கன் பின்வருமாறு விளக்குகிறார்.

"அவர் அநேக ஜனங்களுக்கு நியாயந்தீர்த்து, நெடுந்தொலை மட்டும் வலிய ஜாதிகளுக்கு தீர்ப்புச் செய்வார். அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களைக்கலப்பை கொழுக்களாகவும் தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஜனத்துக்கு விரோதமாய் ஜனம் பட்டயம் எடுப்பதில்லை; இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை.

அவனவன் தன்தன் திராட்சச் செடியின் நிழலிலும் பயப்படுத்துவார் இல்லாமல் உட்காருவான்; சேனைகளின் கர்த்தருடைய வாய் இதைச் சொல்லிற்று." (மீகா 4:3, 4)

"சாலொமோனுடைய நாளெல்லாம் தாண் துவக்கிப் பெயேர் ஷேபாமட்டும் யூதாவிலும் இஸ்ரவேலிலும் ஒவ்வொருவரும் தம் தம் திராடசச்செடியின் நிழலிலும் தம்தம் அத்திமரத்தின் நிழலிலும் சுகமாய்க் குடியிருந்தார்கள்."

(1 இரா. 4:25)

"அந்திகள் ஒழிந்து, எல்லோரும் சமத்துவ உரிமைகளுடன் இணைந்து வாழும் ஒரு சூழலே, நீதியும் சமாதானமும் நிறைந்த சூழல். இச் சூழல் உருவாகாது தடுக்கும் தீயசக்திகளை எதிர்த்துப் போராடுவது தீர்க்கர் கடமை"

(ஆமோஸ் 2:6-7; 5:11-12; மீகா 2:28)

நன்றி. இறையியல்மலர்

**அமைதி நிலவ நீதி ஒரு கட்டாயத் தேவை. நீதி தான் அமைதிக்கான ஒரேவழி. நீதியின்மூலம் மட்டுமே ஒரு நிலையான அமைதியை அடையமுடியும்.**

# ஈழத் தமிழினத்தின் 'மோசே'

கிறிஸ்தவ வேதாகம சரித்திரப்பகுதி, எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து, இஸ்ராயேல் மக்களை மீட்க முனைந்த மோசே பற்றிக் குறிப்பிடுகின்றது. ஒடுக்கப்பட்ட மக்களின் பக்கமே இறையன்பு சார்ந்துள்ளது என்ற ஒரே நம்பிக்கையோடு செயற்பட்டுப் பெரும் வல்லமை பொருந்திய பார்வோன் மன்னனுக்குச் சவால்விடுத்து விடுதலைப் பாதையில் தம் மக்களை 40 ஆண்டுகளாக வழிநடத்தியவர் மோசே. அவர்களுக்குரிய நாட்டை ஒரு மலை மீது நின்று சேய்மையில் கண்ட பின் தமது தலைமைத்துவத்தைத் தக்கவர்களிடம் ஒப்படைத்து விட்டு மரித்தார்.

தந்தை செல்வா அவர்கள் தமிழ் மக்களின் மோசேயாகவே விளங்குகிறார். தமிழீழ விடுதலை பற்றி மிகவும் தெளிவோடும் உறுதியோடும் எம்மை வழிநடத்தியவர் அவர். தூரநோக்கில் விடுதலையின் வெற்றியை இவ்வுலகப் பயணத்தை முடிக்கு முன்பே கண்டுகொண்டார்.

தமிழர் தாயகத்தின் கிழக்குப்பகுதி வாழ் சில தலைவர்கள் அரசுடன் ஒத்துழைத்துத் தம்பகுதியை முன்னேற்ற விழைந்தனர். ஆனால் இன்றும் கிழக்குப் பிரதேசம் முன்னேறாமலிருப்பதையே நாம் காண்கிறோம். மோசேயும் குழந்தைப் பருவம் முதல் பார்வோனின் அரண்மனையில் வாழ்ந்து கொண்டிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தித் தம் மக்களை முன்னேற்ற முயற்சித்திருக்கலாம். ஆனால் அவர் தமக்குரிய சுக போகங்களை இழந்து, அடிமைத்தனத்தில் தவிக்கும் தம் மக்கள் பக்கமே சார்ந்தார். அவர்கள் மத்தியில் வாழும் வாழ்வையே தெரிவு செய்தார். இவ்வாறே எமது தந்தை செல்வாவும் அரசுடன் ஒத்துழைத்துச் சலுகைகளைத் தனக்கும் மக்களுக்கும் பெறும் வாய்ப்பிருந்த போதிலும் அவற்றைப் புறந்தள்ளி தமிழ் மக்களைப் புறக்கணிப்புகளிலிருந்து விடுவிப்பதையே தம் வாழ்வின் நோக்கமாகத் தெரிவு செய்தார். சோவியத் மக்கள் விடுதலையை வென்றெடுப்பதற்கு 70 ஆண்டுகள் எடுத்தது. ஆகவே நாமும் அற்பத்தனமான கவர்ச்சிகளையும் சலுகைகளையும் கண்டு தடுமாறாமல் சோர்வடையாமல் உறுதியான மனத்தோடும் தூர நோக்கோடும், இறையாற்றலில் நம்பிக்கையோடும் விடுதலைப் பயணத்தில் முன்னேறுவோம்.

இன்று மதமும் அரசியலும் பிழையான வழிகளில் கூட்டுச்சேர்ந்து ஒன்றை ஒன்று கீழ்நோக்கி இழுத்துச் செல்கின்றன. இருபக்கத் தலைவர்களும் தத்தமது சுய, குறுகிய நன்மைக்காக ஒருவருக்கொருவர் துணை போகின்ற வர்களாகப் பக்கப்பாட்டு பாடுபவர்களாக விளங்குகின்றனர். ஆனால் அந்த தந்தை செல்வாவின் அரசியலும் மதமும் மற்றும் மனிதவாழ்வின் கூறுகளாகிய தொழில், குடும்பம் முதலியனவும் அவரையும் அவரின் வாழ்வையும் சேவையையும் தரமுயர்த்தும் வகையிலேயே இணைந்திருந்தன. அவரது மத உணர்வு மனிதர்மட்டில் அவருக்குள்ள அரசியற் கடமைகளை ஆணித்தரமாக உணர்த்துவதற்கு உந்து சக்தியாக இருந்தது. அவ்வாறே அவரது சமூக ஈடுபாடுகளும் அவரது இறையுணர்வை வளர்த்தது. ஒரு மறைஞானியாக அவரை மாற்றின. (He was at the same time a true politician and mystic) உண்மையான இறையுணர்வு, அதே இறைவனின் பிள்ளைகளாகிய சகமனிதர்கள் யாவரினதும் நல்வாழ்விலும் ஈடுபட உந்தித்தள்ளும் பெரும் சக்தியாக வெளிப்படும். ஆனால் அநேகமாக எமது மத உறுப்புத்தன்மையும் ஈடுபாடுகளும் எம்மை கூறுபடுத்தி வேலிகளுக்குள் அடைப்பவையாக விளங்குகின்றன. இது விரும்பத்தகாத நிலை. மனிதன் மதத்திற்காகவல்ல. மதம் மனிதனை விடுவிக்கவும் ஒன்று சேர்க்கவும், மேம்படுத்தவும் உதவ வேண்டும். இவ்வாறான முழுமை வாழ்வை வாழ்ந்த இத்தற்காலப் புனிதரின் வழியில் நாம் ஒவ்வொருவரும் செல்ல முயலுவோம்.

(27-3-93) தந்தை செல்வநாயகம் அவர்களது 95 ஆவது பிறந்த தினத்தையொட்டிப் பரியோவான் ஆலயத்தில் இடம்பெற்ற உரைகளின் தொகுப்பு.)

தொகுப்பு திரவியம்.

நன்றி. புதிய உலகம்

* *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்கள் காணாமற் போவதைத் தடுப்பதற்கு காத்திரமான நடவடிக்கை எடுப்பது அரசின் கடமை

*குபியா எதிர் கொலம்பியா அறிவித்தல் நம்.161/ 1983 கூருத்து ஏற்பு - 1987ம் ஆண்டு நவம்பர் 2ம் திகதி*

Rubio v colombia,UNHRC Communication No.161/1983

adoption of views 2 November 1987

இருவர் காணாமல் போய் பின் கொல்லப்பட்டதையடுத்து பொறுப்பாளிகளை கண்டுபிடிக்கக் காத்திரமான புலன் விசாரணை நடத்துவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்காததனால் கொலம்பிய அரசு சிவில் உரிமைகளும் அரசியல் உரிமைகளும் மீதான சர்வதேச பொருத்தனையின் 6வது உறுப்புரையை (உயிர்கொண்டிருத்தற்கான உரிமை) மீறியதாக ஐ.நா.மனித உரிமைகள் குழு தீர்ப்பளித்தது.

இந்த முறைப்பாட்டை இறந்து போன தன் பெற்றோர் சார்பிலும் தன் சார்பிலும் 30 வயதான கொலம்பியப் பிரஜை ஒருவர் தொடுத்திருந்தார். 1981 மார்ச் மாதம் தான் கெரில்லாப் படையைச் சேர்ந்தவன் என்று சந்தேகத்தின் பேரில் கொலம்பிய ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதாகவும், ஒப்புதல் வாக்கு மூலத்தில் கையொப்பமிடாவிட்டால் அவருடைய பெற்றோர் கொல்லப்படுவார்கள் என்று பயமுறுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார். 10 நாட்களுக்குப்பின் சாதாரண உடைதரித்தவர்களும் சீருடை தரித்தவர்களுமாக சிலர் தாம் கெரில்லா எதிர்ப்புப்படையினர் என்று கூறி அவருடைய பெற்றோரின் வீட்டுக்கு வந்து பலவந்தமாக அவர்களை கொண்டு சென்றனர். ஒரு வாரத்திற்கு பின் அவர்களுடைய சடலங்கள் அங்குள்ள சுற்றுப்புறத்தில் காணப்பட்டன. அந்த காலக்கூட்டத்தில் சுகுடா என்றழைக் கப்பட்ட அந்த மாவட்டத்தில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் அரச படைகளினால் மேற்கொள்ளப் பட்டதாகவும், அங்கிருந்து கிராமங்கள் அரசப்படைகளின் கடுங்கட்டுப்பாட்டில் இருந்ததாகவும் கூறப்பட்டது.

குழுவின் விசாரணையில் முழுமையாகப் பங்குகொண்ட கொலம்பிய அரசு, கொலைகள் விசாரிக்கப்பட்டதாகவும், படையினருக்கெதிரான குற்றச்சாட்டை நிரூபிக்க எந்தச் சாட்சியமும் இல்லாதப்படியால் வழக்குக் கோவை மூடப்பட்டது எனவும் தெரிவித்தது.

கொலைகளுக்கு அரசப்படையினரே பொறுப்பாளிகள் என்று நம்புவதற்குக் காரணம் இருந்ததாகவும் குழு கூருதியது. ஆனால் கொலையாளிகளை அடையாளம் காண மறுக்க முடியாத சாட்சியம் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டது. இருப்பினும் அத்துடன் விசயம் முடிந்தது என்று குழு கூருதவில்லை. 6ம் உறுப்புரைக்கான குழுவின் பொதுவிளக்கம் (9 EHRR 169ல் பிரசுரிக்கப்பட்டது) இந்த வழக்குக்குப் பொருத்தமானது என்று குழு குறிப்பிட்டது.

உயிர்கொண்டிருந்தற்கான உரிமையை முழுமையாகப் பாதுகாப்பதற்காக நாடாளும் கட்சிகள் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டன.

"ஆட்கள் காணாமற் போவதையும், போக செய்வதையும் தடுப்பதற்குக் குறிப்பான காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். உயிர் கொண்டிருத்தற்கான உரிமை மீறப்படும் வகையில் காணாமல் போகும்போது முற்று முழுதாக விசாரணை மேற்கொள்ளுவதற்குப் பொருத்தமான சுதந்திரமான, ஒரு நிறுவனத்தை உருவாக்கி வசதிகளையும் வழிமுறைகளையும் அமைக்க வேண்டும்.

இந்த வழக்கில் செய்யப்பட்ட புலன் விசாரணைகளும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் மேற்கூறிய கடமையை நினைவுபடுத்தும் வகையில் அமையவில்லை என்று குழு தீர்மானித்தது.

*நன்றி - உமனி உரிமை*

## நண்பனே கொஞ்சம் நில்

*நீ எந்தப் பக்கம்? வலப் பக்கமா?*
*இடப் பக்கமா?*
*ஒடுக்கப்பட்டோர் பக்கமா?*
*ஒடுக்குவோர் பக்கமா?*

*வென்ற பக்கம் நின்று*
*நீதியைப் புறக்கணிக்கிறாயா?*
*பலமற்றவர் பக்கம் நின்று*
*நீதிக்கு குரல் கொடுக்கிறாயா?*

*குற்றத்தைச் சுட்டிக்காட்டி*
*சத்திய முழக்கமிட்டு*
*கொலைப்பட்ட அருளப்பனா?*
*பதவியைக் காக்க*
*நீதியை அடகு வைத்த*
*பிலாத்துவா?*

*நீ ஒரு கோலியாத்தா?*
*அவனை எதிர் நின்ற*
*சிறுவன் தாவீதா?*

*நீ யார்.....?*
*நீதியென்று*
*எதைக் கருதுகிறாய்?*
*வேண்டி நிற்போர்க்கு*
*நீ சொல்லிப் போகும்*
*நற்செய்தி என்ன?*

*"நீதியின் மேல் பசிதாபம்*
*உள்ளவர்கள்,*
*நீதியின் நிமித்தம் துன்புறுவோர்*
*பேறு பெற்றார்"*

—

—தாய்

## என் ஜனத்தைப் போகவிடு

நான் விடுதலையின் இறைவன்,
என் ஜனத்தைப் போகவிடு
நவீன பார்வோனே.

அடிமைக் கோசேன் இனியும் வேண்டாம்,
சுதந்தரக் கானான் போகட்டும் அவர்கள்,
ஏமாற்றாதே நீ அவர்களை

எட்டடிக் குடிசைக்குள்
முடக்கி வைத்தாய்
வேலைப் பளுவால்
சாக வைத்தாய்
வளரும் தலைமுறையை நீ
கொலைதான் செய்யலையோ?
இனியும்,
இந்த கதைத்தான்,
இங்கே
தொடர விடுவேனோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக பாரம்பரிய கலை வடிவங்கள்

இலங்கையும் இந்தியாவும் வெகு நெருக்கமான உறவுகளைக் கொண்ட அண்டை நாடுகள். இதனால் இலங்கையின்அரசியல் பொருளாதார கலை இலக்கிய முயற்சிகளில் இந்திய செல்வாக்கு இருப்பது தவிர்க்க முடியாததே. இலங்கையின் தமிழ், சிங்கள ஆங்கில இலக்கியங்கள் மூன்றிலும் இச்செல்வாக்கை கண்டு கொள்ள முடியும். இச்செல்வாக்கு இந்தியாவிலிருந்து புலம் பெயர்ந்து வந்த இந்திய வம்சாவளியினரின் இலக்கிய முயற்சிகளில் எவ்விதம் பாதித்துள்ளது, எத்தகைய வளர்ச்சிக்கு அடிக்கோலியது என்பதை ஆராய்வதே இக்கூட்டுரையின் நோக்கமாகும்.

இலங்கையும் இந்தியாவும் பிரித்தானிய குடியேற்ற நாடுகளாக இருந்த காலம் வரை இந்தியாவின் செல்வாக்கு இலங்கையில் அதிகமாயிருந்தது.

இலங்கையின் வடபகுதியான யாழ்ப்பாணம் தமிழர் செறிந்து வாழும் பிரதேசம். இந்தியாவின் தென்கோடியில் செறிந்து வாழ்ந்த தமிழர்கள் இவர்களுக்கிடையில் கடல் பிரிந்தாலும் அண்மையில் வாழ்ந்த அண்டை, நாட்டவராவார். எனவேதான் இந்தியாவைத் தாயகமாகக் கருதும் பழக்கம் சமீப காலம் வரை இலங்கையிலிருந்தது.

கலாயோகி ஆனந்தகுமார சுவாமி போன்றவர்கள் ஐரோப்பிய நாடுகளைவிட இந்தியாவுடனே இலங்கைத் தனது தொடர்பை அதிகரித்துக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினர்.இலங்கைச் சமூக சீர்திருத்த சபையின் 1907 -ம் ஆண்டு கூட்டத் தலைமையுரையில் இதனை வெளிப்படுத்தி இருந்தார்.

இந்தியாவின் தென்கோடித் தமிழர்கள் பெருந்தோட்ட முயற்சிகளில் ஈடுபடுவதற்காக இங்கு அழைத்து வரப்பட்டு ஏராளமாக இலங்கையின் மத்திய மலைநாட்டில் குடியமர்த்தப்பட்டார்கள். இவர்களை மலையக மக்கள் என்றும் குறிஞ்சி நில மக்கள் என்றும் இன்றும் இனம் காட்டப்படுகிறார்கள். இவர்களைப் பற்றியதும், இம்மக்களிடையே தோன்றிய இலக்கியப் படைப்பாளிகளின் ஆக்கங்களும் "மலையக இலக்கியம்" என்று குறிப்பிடப்படுகிறது. இவ்விதம் வரையறுத்துக் குறிப்பிடுவதும் இலங்கை தமிழ் இலக்கியமே.

இந்திய மண்ணில் வாழ்ந்து பழகிய இம்மக்களை இலங்கையில் குடியேறிய பின்னர் சூழ் நிலை மாற்றத்துக்கு ஏற்ப புதிய புதிய அனுபவங்களைப் பெற்றார்கள். இந்திய மண்ணின் தொடர்பை முற்றாக அறுத்துக்கொள்ளாமல், அத்தொடர்பை குடியேறிய புதிய இடத்தில் தங்களின் புதிய முயற்சிகளுக்கு உதவுகிற விதத்தில் பயன்படுத்திக் கொண்டார்கள். இதுவே இவர்களின் முதற் பங்களிப்பாகும்.

இந்திய வம்சாவளியினரான மலையக மக்கள் இலங்கையில் 200ஆண்டுகளுக்கு மேலாக வாழ்கின்றனர். 1824-ம் ஆண்டு 16 குடும்பங்களின் வருகையோடு இவர்களின் குடியேற்றம் இலங்கையில் ஆரம்பமானது. இவர்களின் ஆரம்பகால இலக்கிய வெளிப்பாடுகள் வாய்மொழி இலக்கியமாகவே அமைந்தன.

இந்திய வம்சாவளியினர் இங்கு புலம் பெயர்ந்து வந்தபொழுது தங்களின் பாரம்பரிய கலைவடிவங்களையும் தங்களோடு கொண்டே வந்தனர். தேயிலைக்கு முன்னர் கோப்பிக் காலத்தில் கூட "கும்மியோ கும்மி கோப்பிக்காட்டு கும்மி" என்பது இவர்கள் வளர்த்த கலையாகும்.இவர்கள் மத்தியில் வேர்க்கொண்டு தழைத்த கலைகளை முதலில் பார்ப்போம். கும்மி, கோலாட்டம்,ஒயிலாட்டம், கரகக்கலை, காவடி ஆட்டம்,, பொன்னர் சங்கர் கதை, அர்ச்சுனன் தபசு, காமன் கலை, தப்பு இசை, போன்ற பலவாகும்.

## அந்தனி ஜீவா

மலையக மக்களின் பாரம்பரிய கலைகளில் ஒன்றுதான் தப்பு. நமது தப்பு கருவியை 18 வகையாக அடிக்கலாம். காலைத்தப்பு, பிறட்டு தப்பு, திருமணத்தப்பு, சடங்கு தப்பு, சாவுத்தப்பு, இப்படி பல விதமான குறியீடுகளாக தப்பின் ஒலியின் மூலம் உணரலாம்.

இதே போன்று காவடி ஆட்டம், கரகாட்டம், திருவிழா, உற்சவங்களுக்கு தப்பு கருவியினை பயன்படுத்துவார்கள் மற்றும் காமன் கூத்து, அர்ச்சுனன் தபசு, பொன்னர் சங்கர் கதை, ஆகியவற்றிற்கு தப்பு கருவியை பயன்படுத்துவார்கள். இன்னொரு முக்கியமான இசைக்கருவி உடுக்கு. காவடி ஆட்டம், கரகாட்டம், பேயாட்டம் போன்றவற்றிற்கு உடுக்கே நாயகனாக திகழும்.

இதுபோன்று பாரம்பரிய கருவிகளான உறுமி மேளம், தமூர், செஞ்சனக்கட்டை சங்கு, தண்டை போன்ற கருவிகள் உபயோகிக்கப்படும். இன்னும் கூட நம்மிடையே கும்மி, கோலாட்டம், காவடி என்பன. இவைகள் தோட்ட மக்களின் வாழ்வோடு இரண்டறக்கலந்து விட்ட பாரம்பரிய கலைகளாகும்.

தோட்டங்களில் ஆலய திருவிழாக்களின் போதும் பொது நிகழ்ச்சிகளிலும் வைபவங்களிலும் பெண்கள் கும்மியடித்து மகிழ்வார்கள்.

*தன்னனனாதினம் தன்னனானே—தன*
*தன்னனனாதினம் தன்னானே*
*தன்னனனானே என்று தான்*
*சொல்லுங்களேன்.*
*உங்க நாவுக்கு சர்க்கரை நான்*
*தாரேன்*
*தன்னனாதினம் தன்னானே.*
*தேங்காய் உடைக்கவே தண்ணி*
*சிதறவே*
*தெப்பங்குளம் எல்லாம் தத்தளிக்க*
*மருத மீனாட்சி மாயவன் தங்கச்சி*
*எப்ப வருவாளாம் தெப்பம் பார்க்க*
*மருத வந்தாலும் தேரோடாதாம் —*
*அந்த*
*மருத மீனாட்சி.....மாயவன் தங்கச்சி*
*வந்து வடம் தொட்டால்*
*தேரோடுமாம் .*

*தன்னன்னாதினம் தன்னானே*
*சின்னக்குளத்திலே நீராடி —அந்த*
*சிங்காரத் தோப்பிலே வேட்டையாடி*
*வீட்டுக்கு வாராம் வெள்ளிரதமேறி*
*வீரக்கணைக் கொண்டு வீசுங்கடி*
*தன்னன்னா தினம் தன்னானே.*

இத்தகைய பாடல்களை பாடி பெண்கள் கும்மியடித்து மகிழ்வார்கள். இன்று நம்மிடையே காணப்படும் கூத்துக்கள் காமன் கூத்து, பொன்னர் சங்கர் கதை, அர்சுனன் தபசு. அதனால் நம்மக்களிடையே ஆண்டுதோறும் அதி சிறப்பாக ஆடப்படுவது காமன் கூத்தாகும். மலையக தோட்டங்களில் பக்தியுடன் கொண்டாடப்படுவது காமன் கூத்தாகும்.

மலையக பாரம்பரிய கலைகளில் என்றும் எம்முடன் நின்று நிலவி வருவது மலையக வாய்மொழிப் பாடலாகும்.இதனை நாட்டார் பாடல் நாட்டார் இலக்கியம் என்று நம்மவர்கள் சிலர் இதனை தோட்டப்புற இலக்கியம் என சிறப்பாக குறிப்பிடுவார்கள்.

ஏட்டில் எழுதாத இதயத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகங்களான வாய்மொழிப் பாடல்களின் மூலமே இந்த மக்களின் வரலாற்றை அறிந்து கொள்ள முடியும் கிராமியப் பாடல்கள், நாட்டார் பாடல்கள், நாடோடிப்பாடல்கள், தோட்டப் பாடல்கள், கதைப்பாடல்கள், தெம்மாங்குப் பாடல்கள், என்றெல்லாம் இவ்வாய்மொழி இலக்கியம் வகுக்கப்பட்டும் தொகுக்கப் பட்டும் உள்ளது.

இலங்கையில் ஏனைய பிராந்திய வாய்மொழி இலக்கியம் அம்மக்களின் சமூக வாழ்க்கை முறைகளையும் பழக்க வழக்கங்களையும் வெளிப்படுத்தி அமைகின்றப் போது, இந்த மலையக மக்களின் வாய்மொழிப் பாடல்கள் அம்மக்களின் வரலாற்றில் பல நெளிவு சுளிவுகளை வெளிப்படுத்தி இருக்கின்றதை கண்டு கொள்ளலாம். இது இலங்கை இலக்கியத்திற்கு இந்த மக்களின் இன்னொரு பங்களிப்பாகும்.

இந்த வாய்மொழிப்பாடல்கள் இவர்களின் துன்ப துயரங்கள், சோகப்பெருமூச்சுக்கள், இன்பங்கள், ஆசாபாசங்களையும் கண்டுக் கொள்ளலாம். மலையக வாய்மொழிப் பாடல்களில் தாலாட்டு எனத்தொடங்கி காதல், ஒப்பாரி, கும்மி, என்று விரியும் இந்த பாடல்களுக்கு ஆதாரமாய் நிற்பது தமிழ் நாட்டின் பண்டைய கிராமிய கலாச்சாரம் தான்.

அவர்கள் அங்கிருந்து வரும் போது

”வாடையடிக்குதடி
வாடக்காத்து வீசுதடி
சென்னல் மணக்குதடி
சேர்ந்து வந்த கப்பலிலே

என்று கப்பலில் வந்த சோகக் கதை பாடலில் புலம்புகிறான்.

கண்டிச்சீமைக்கு வந்த பின் பாடுகிறான்

”ஊரான ஊரிழந்தேன்
ஒத்தப்பனை தோப்பிழந்தேன்
பேரான கண்டியிலே
பெத்த தாயே நாமறந்தேன்.

என்ற பாடலை பாடுபவனின் அநாதரவான வஞ்சிக்கப்பட்ட நிலையைக் காட்டுவதாக அமைகிறது.இதேப்போன்று தேயிலைக்கு முன் கோப்பி பயிர்ச்செய்கையின் போது ஒரு பாடல்

கோணக் கோண மலையேறி

கோப்பிப்பழம் பறிக்கையிலே

ஒரு பழம் தப்பிச்சின்னு
ஒதைச்சானையா சின்னதொரை

இவ்வாறு கோப்பிப் பழம் பறிக்கையில் கங்காணி காட்டு மேலே

கண்டாக்கையா ரோட்டு மேலே
பொடியன் பழமெடுக்க
பொல்லாப்பு நேர்ந்ததையா.....

என வேதனைப்படுகிறார்.

இனி தேயிலைக்காலத்துக்கு வருவோம்.

கொழுந்து வளர்ந்திருச்சு
கூடபோட நாளாச்சு
சேந்து நெரே புடிச்சு
சிட்டா பறக்குறாளே.

தேயிலை கொழுந்து வளர்ந்ததைப் பார்த்து மனம் பூரித்து பாடுகிறாள்.

மலையக தேயிலை தோட்டங் களில் கங்காணிமார்களின் காட்டுத்தர்பார்களை அட்டகாசங்களை பின்வரும் பாடல் மூலம் உணரலாம்

எண்ணி குழி வெட்டி
இடுபொடிஞ்சி நிக்கையிலே
வெட்டு வெட்டு என்கிறானே
வேலையத்த கங்காணி.

என்று தன் வேதனையை வெளிப்படுத்துகிறான்.இதோ இன்னொரு பாடல்

அந்தான தோட்டமுனு
ஆசையா தானிருந்தேன்
ஒர மூட்ட தூக்கச் சொல்லி
ஒதைக்கிறாரே கண்டாக்கையா

மலையக வாய்மொழிப் பாடல்களிலே துன்ப துயரங்களை சோகப் பெருமூச்சுகளையும் பலரும் எடத்துக்காட்டியுள்ளார்கள். அவர்களி டையே இன்பத்துன் பங்களும் காதல் பாடல்களும் இருந்ததற்கு பல பாடல்கள் சான்றாக உள்ளன.

இதோ மலையகத்தின் பிரபலமான ஒரு பாடல்

கூட மேலே கூடவச் சி
கொழுந்தெடுக்க போறப்புள்ளே
கூட ஏறக்கி வச்சு

குளுந்த வார்த்தை சொல்லிப்போடி

என்று தன் உள்ளக்கிடங்கையை வெளிப்படுத்துகிறான். அவளோ தான் திருமணமானவள் என்பதை இவ்வாறு வாய் மொழிப் பாடலாக வெளிப்படுத்துகிறாள்.

என் புருஷன் கங்காணி
என் கொழுந்தன் கவ்வாத்து
எளைய கொழுந்தனுமே
இஸ்டோரு மேல் கணக்கு

இந்த பாடலைக் கேட்டுக் கொண்டிருந்த அவளின் மாமன் மகள் பாடுகிறாள்

கல்லுருக கடலுருக
கண்டார் மனமுருக
நானும் சடங்காகி
நாப்பத்தொரு நாளாச்சு
நானும் சடங்காகி
நாப்பத்தொரு நாளாச்சு
ஏனின்னு கேக்கலையே
ஏறிட்டு முகம் பார்க்கலையே

என மன உணர்வை வெளிப் படுத்துகிறாள் .இதே போன்று மலையகத்து தோட்டப்புற சிறுவர்கள் பாடும் பாடல் இது

‘சிக்கு புக்கு
நீலகிரி தொப்பிதோட்டம்
நாங்க வந்த
கப்பலிலே மிச்ச கூட்டம்”

நீலகிரி என்பது நானுஒயாவையும் தொப்பி தோட்டம் என்பது அட்டனையும் குறிக்கும் தமிழ்ப்பெயர்கள். மலையகத்தில் வழங்கி வரும் வாய்மொழிப் பாடல்களில் இது போன்ற வரலாற்று உண்மைகள் மறைந்து கிடக்கின்றன.

இத்தகைய வாய்மொழிப் பாடல்களை அழிந்துவிடாமல் பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகும். இன்று நவீன வசதிகளுமுண்டு. அதனால் ‘ஒடியோ’ வில் பதிவு செய்து இந்தப்பாடல்கள் பாதுகாக்கப்பட வேண்டும். மலையக வாய்மொழிப்பாடல்கள் மலையக மக்களின் வரலாற்று ஆவணமாகும்.

அமெரிக்க வாழ் கறுப்பின மக்களைப் பற்றி ஆய்வுகள் நடத்தியவர்கள் கூட அந்தமக்களின் தோட்ட வாழ்க்கை அடிமை முறை சரித்திரச் சம்பவங்கள் என்று கவனம் காட்டிய அளவுக்கு அவர்களிடமே உயிர் வாழ்ந்த வாய்மொழிப்பாடல்களைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை என்ற குறைப்பாடுண்டு. அதனால் பாரம்பரிய கலைவடிவங்களை பாதுகாப்பதும் நமது கடமையாகும்.

*[கண்டிப்பிரதேச தமிழ் சாகித்திய விழாவில் பேராசியர் எஸ். தில்லைநாதன் தலைமையில் 20.7.93. ல் நடைபெற்ற மலையக பண்பாட்டியல் ஆய்வரங்கில்அந்தனிஜீவா நிகழ்த்திய உரையே இங்கு இடம்பெற்றுளளது.]*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

If Undelivered please return to :
Commission for Justice & Peace
National Christian Council
368/6 Bauddhaloka Mawatha
Colombo 7.

http :\\ www. thamizham. net